தமிழே எங்கள் உயிர்
TAMIL IS OUR LIFE

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை - ஐக்கிய இராச்சியம்
Tamil Education Development Council - United Kingdom

வளர்தமிழ்ப் பாடத்திட்டம்
TEDC'S Tamil Education System
14 Countries 60,000 Students

Australia	Denmark	Germany	Mauritius	Sweden
Belgium	Finland	Holland	New Zealand	United Kingdom
Canada	France	Italy	Norway	

வளர் தமிழ்

தமிழ் ஆசிரிய பயிற்சிச் செயலமர்வு
கல்வியாண்டு 2017 / 2018

நாள் 1 : 28.10.2017 சனிக்கிழமை

9.00 மணி – 10.30 மணி: வளர்தமிழ் பாடத்திட்ட பள்ளிகளின் நிர்வாகிகள் சந்திப்பு

10:30 மணி – 18:00 மணி: வளர்தமிழ் மழலையர்நிலை முதல் வளர்தமிழ் 4 பயிற்சிச் செயலமர்வு

நாள் 2: 29.10.2017 ஞாயிற்றுக்கிழமை

09:00 மணி – 17:00 மணி: வளர்தமிழ் 5 முதல் வளர்தமிழ் 12, Tamil GCE O/L & A/L Exams

இடம் : Alperton Community School, Lower School, Ealing Road, Wembley, Middlesex, HA0 4PW

Tamil Language Training Department, Tamil Education Development Council - United Kingdom
162 Franciscan Road, London, SW17 8HH ☎ 020 8432 8899 / 077 7175 3525 info@tedc.org.uk www.tedcuk.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017 / 2018 கல்வியாண்டு நாட்காட்டி

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக்கிளை

Tamil Education Development Council – United Kingdom

TEDC U.K -www.tedcuk.com TEDC Head Office-www.tamiledc.com

	இலையுதிர் காலம் - தவணை 1	
15/06/2017	**வியாழன்**	புதிய கல்வியாண்டுக்கான பாடநூல் தேவைகள் பகுதி 1 விண்ணப்பித்தல் -**சுற்றறிக்கை 1**
27/08/2017	**ஞாயிறு**	அனைத்துலக தமிழ்ப்பொதுத்தேர்வு 2017 தேர்வுப்பெறுபேறுகள் அனுப்புதல் **-சுற்றறிக்கை 3**
31/08/2017	**வியாழன்**	TEDC U.K ஊடான Cambridge GCE (A/L) தமிழ்த்தேர்வுக்கான விண்ணப்ப முடிவுநாள்-**சுற்றறிக்கை 2**
31/08/2017	**வியாழன்**	புதிய கல்வியாண்டுக்கான பாடநூல் தேவைகள் பகுதி 2 விண்ணப்பித்தல் -**சுற்றறிக்கை 3**
10/09/2017	**ஞாயிறு**	தமிழ்த்திறன் போட்டிகள் 2017 (பேச்சுப்போட்டி, திருக்குறட்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி) ஆவணங்கள் அனுப்புதல் **சுற்றறிக்கை 4**
30/09/2017	**சனி**	அனைத்துலக தமிழ்ப்பொதுத்தேர்வு2017 தேர்வுப்பெறுபேறுகள் மீளச்சரிபார்த்தல் விண்ணப்ப முடிவுநாள்-**சுற்றறிக்கை 3**
07/10/2017	**சனி**	தமிழ் இலக்கியமாணி முதலாம் ஆண்டு முன்மாதிரித் தேர்வு
08/10/2017	**ஞாயிறு**	தமிழ் இலக்கியமாணி இரண்டாம் ஆண்டு முன்மாதிரித் தேர்வு
15/10/2017	**ஞாயிறு**	அனைத்துலக தமிழ்ப்பொதுத்தேர்வு 2017 மீளச்சரிபார்த்த தேர்வுப்பெறுபேறுகள் அனுப்புதல்
15/10/2017	**ஞாயிறு**	த.க.மே.பேரவை(TEDC)ஆசிரியர் பயிற்சிப்பட்டறை 2017 விண்ணப்ப முடிவு நாள் **-சுற்றறிக்கை 4**
22/10/2017	**ஞாயிறு**	அனைத்துலக தமிழ்ப்பொதுத்தேர்வு 2017 இல் அதிதிறன் 1+ பெற்ற மாணவர், வளர்தமிழ்10 முதல் வளர்தமிழ் 12 சித்தியெய்திய மாணவர் மேடைமதிப்பளிப்பில் பங்குபற்றவுள்ள மாணவர் விபரம் அனுப்பும் இறுதிநாள்-**சுற்றறிக்கை 4**
22/10/2017	**ஞாயிறு**	நூல் விநியோகம் -பகுதி 2 இன் விற்ற பணம் பெறுதலுடன் விற்காத நூல்கள் மீளப்பெறல்-**சுற்றறிக்கை 5**
28/10/2017	**சனி**	அனைத்துப் பள்ளிகளுக்குமான TEDC-U.K ஆசிரியர் பயிற்சிப்பட்டறை 2017 பகுதி 1-மழலையர்நிலை முதல் வளர்தமிழ்4 வரையான வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கானது. பட்டறை முடிந்த பின் நிர்வாகிகள் சந்திப்பு2017 (வழமை போல இடைக்காலத் தவணைவிடுமுறையில்)
29/10/2017	**ஞாயிறு**	அனைத்துப் பள்ளிகளுக்குமான TEDC-U.K ஆசிரியர் பயிற்சிப்பட்டறை 2017 பகுதி 2- வளர்தமிழ் 5 முதல் வளர்தமிழ் 12 வரையான வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கானது
12/11/2017	**ஞாயிறு**	தமிழ்த்திறன் போட்டிகள்-பேச்சுப்போட்டி, திருக்குறட்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி பள்ளியில் 1ம்,2ம்,3ம் இடம் பெற்றவர்கள் TEDC-U.K இறுதிப்போட்டிக்காக விண்ணப்பங்கள் அனுப்பும் இறுதிநாள்-**சுற்றறிக்கை5**
03/12/2017	**ஞாயிறு**	TEDC-U.K தமிழ்த்திறன் இறுதிப்போட்டிகள் 2017 (பேச்சு, திருக்குறள், கட்டுரை, கவிதை)
10/12/2017	**ஞாயிறு**	தமிழ் இலக்கியமாணி முதலாம் ஆண்டு நிறைவுத் தேர்வு
17/12/2017	**ஞாயிறு**	TEDC-U.K தமிழ்த்திறன் இறுதிப்போட்டி 2017 முடிவுகள் பேச்சு, திருக்குறள், கட்டுரை, கவிதை)
	இலைதுளிர் காலம் - தவணை 2	
07/01/2018	**ஞாயிறு**	தமிழ் இலக்கியமாணி இரண்டாம் ஆண்டு நிறைவுத் தேர்வு
21/01/2018	**ஞாயிறு**	அனைத்துலக தமிழ்ப்பொதுத்தேர்வு 2017 இல் அதிதிறன் 1 + பெற்ற மாணவர், வளர்தமிழ்10முதல் வளர்தமிழ்12 ஆண்டுகள் சித்தியெய்திய மாணவர் மேடைமதிப்பளிப்பும் TEDC-U.K தமிழ்த்திறன் போட்டிகள் 2017 இன் பரிசளிப்பும்- **சுற்றறிக்கை** 6
27/01/2018 அல்லது 28/01/2018	**சனி அல்லது ஞாயிறு**	அனைத்துலக தமிழ் அரையாண்டுப் பொதுத்தேர்வு 2017 (வழமை போல 1ம் மாத இறுதி சனி-ஞாயிறு)
04/02/2018	**ஞாயிறு**	அனைத்துலக தமிழ்ப் பொதுத்தேர்வு 2018 இற்கான விண்ணப்பம் கோரல்-**சுற்றறிக்கை 6** தேர்வுநடத்துநர் பயிற்சிப்பட்டறை 2018 க்கான விண்ணப்ப முடிவு நாள்
06/02/2018	**செவ்வாய்**	TEDC U.K ஊடான Cambridge GCE (O/L) தமிழ்த்தேர்வுக்கான விண்ணப்ப முடிவுநாள்
11/03/2018	**ஞாயிறு**	அனைத்துலக தமிழ்ப் பொதுத்தேர்வு 2018 இற்கான விண்ணப்ப முடிவு நாள்-**சுற்றறிக்கை 6** தேர்வுநடத்துநர் பயிற்சிப்பட்டறை 2017
	கோடை காலம் - தவணை 3	
28/04/2017	**சனி**	தமிழ் இலக்கியமாணி இரண்டாம் ஆண்டு நிறைவு செய்தவர்களுக்கான பட்டமளிப்பு - பிரான்சு
05/05/2018	**சனி**	Croydon, Hounslow பகுதிக்கான அனைத்துலக தமிழ் கேட்டல், பேசுதல், வாசித்தல் பொதுத்தேர்வு 2017
12/05/2018	**சனி**	Harrow, Plumstead, Miltonkeynes பகுதிக்கான அனைத்துலக தமிழ் கேட்டல், பேசுதல், வாசித்தல் பொதுத்தேர்வு 2017
13/05/2018	**ஞாயிறு**	Ilford, Leicester, Swindon, Wales, Out of London பகுதிக்கான அனைத்துலக தமிழ் கேட்டல், பேசுதல், வாசித்தல் பொதுத்தேர்வு 2017
27/05/2018	**ஞாயிறு**	பள்ளிரீதியான பாடநூல் தேவைகளின் (அண்ணளவான) விண்ணப்ப முடிவு நாள்-பகுதி1-**சுற்றறிக்கை7**
02/06/2018	**சனி**	அனைத்துலக எழுதுதல் தமிழ்ப் பொதுத்தேர்வு 2018 (வளர்தமிழ்1 முதல் 12 வரை 6ம் மாத முதல் வார சனி)
09/06/2018	**சனி**	பாடநூல் விநியோகம் - பகுதி 1 -**சுற்றறிக்கை 8**
11/06/2018 TO 06/07/2018	**திங்கள்-வெள்ளி**	அனைத்துலக எழுதுதல் தமிழ்ப் பொதுத்தேர்வு 2017 விடைத்தாள் திருத்தம் பிரான்சு திங்கள் முதல் வெள்ளி வரை ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு வகுப்பு நிலைகளாக திருத்தும் பணி நடைபெறும்.
08/07/2018	**ஞாயிறு**	நூல் விநியோகம் -பகுதி 1 இன் விற்றபணம் பெறுதலுடன் விற்காத நூல்கள் மீளப்பெறல்

☞ - மேற்படி நிகழ்வுகள் தவிர்க்கமுடியாத நிலைகளில் மட்டும் முன்அறிவித்தலுடன் மாற்றத்திற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழே எங்கள் உயிர்
TAMIL IS OUR LIFE

தமிழர் கல்வி மேம்பாட்டுப்பேரவை - ஐக்கிய இராச்சியம்
Tamil Education Development Council – United Kingdom TEDC UK
162 Franciscan Road, London SW17 8HH
020 8432 6999 / 077 7175 3525 www.tedcuk.com

வளர்தமிழ்ப் பாடநூலினைப் பின்பற்றும் அனைவருக்கும் அன்பு நிறைந்த வணக்கம் !

வளர்தமிழ்ப் பாடநூல் ஆசிரிய பயிற்சிச்செயலமர்வு 2017 / 2018

உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களால் பதினான்கு நாடுகளில், அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பாடத்திட்டமான வளர்தமிழ் பாடநூல்களினைப் பின்பற்றி வருகின்றனர். ஐக்கிய இராச்சியத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏழாயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் இப் பாடத்திட்டத்தைப் பின்பற்றி, தொடர்ச்சியாக GCE (O/L) & GCE (A/L) Tamil Languge தேர்வுகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர்.

இப் பாடத்திட்டத்திற்கான தமிழ் ஆசிரியர் பயிற்சிச்செயலமர்வு ஆண்டு தோறும் அந்தந்த நாடுகளில் நடைபெறுவது வழமையாகும். தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளையின் ஆசிரியர் பயிற்சிச்செயலமர்வு பதினைந்தாவது ஆண்டாக வழமை போல பள்ளி இடைக்காலத் தவணை விடுமுறையில் நடைபெறுகிறது. இம் முறை இரண்டு நாட்கள் கொண்ட பயிற்சிச்செயலமர்வாக நடைபெறுகிறது.

நோக்கம் (VISION)

“ புலம்பெயர் தமிழ்த் தலைமுறையினர் தமது தாய்மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைப் பேணும் திறனுடைய மனப்பாங்கு கொண்ட குமுகாயத்தை உருவாக்குதல்''

நோக்கக்கூறு (MISSION)

“ தூரநோக்கை எய்துவதற்காக இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டலும், வழிகாட்டலுக்கான திறன், மனப்பாங்கு கொண்ட பெற்றோர், ஆசிரியர், தமிழ் குமுகாயம் ஆகியோருக்கான வழிகாட்டலையும் வளத்தினையும் வழங்குவதுடன் நலிவுகளையும் இனங்கண்டு அதன் மேம்பாட்டிற்கான தேவைகளை வழங்குதல்''



பயிற்சிச் செயலமர்வின் மேலும் நோக்கங்களாக

வளர்தமிழ் பாடநூல்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை ஒருங்கிணைத்து, பாடத்திட்ட நடைமுறையாக்கத்திற்கு உதவுதல் புலம்பெயர் நாட்டுக் கற்பித்தல் முறைகளை அறிந்து அதற்கேற்ப மாணவர்களுக்குக் கற்பிக்க உதவுதல், ஆசிரியர்களை மேலும் வளப்படுத்துதல், மாணவர்களை மதிப்பீடு செய்த போது பெற்ற விடயங்களை மீள்பார்வை செய்து மாணவர்களுக்கு ஏற்ற வகையில் எப்படிக் கற்பிப்பது? என்பதைத் தெளிவு படுத்துதல், தேடல் மூலம் கிடைத்த புதிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல் நினைவூட்டல், மீண்டும் எடுத்துச் சொல்லல், கருத்துப் பரிமாற்றம், பட்டறையின் மூலம் ஆசிரியர்கள் பெற்ற பயிற்சி மாணவர்களுக்குச் சென்றடைதலுக்காக உதவுதல் என்பனவாகும்.

அடைவுகளில்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பட்டயக் கல்வி நிறுவகத்தின் நெறிப்படுத்தலில் நடாத்தப்படும் தமிழ் இலக்கியமாணி கற்கை நெறியில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து இருநூறு வரையான தமிழ் ஆர்வலகர்கள் கற்கை நெறியினைத் தொடர்கின்றனர். இதில் பெரும்பாலானோர் ஆசிரியர்களாகவும், வளர்தமிழ் 12 முடித்த மாணவர்களாகவும் இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இவ் ஆண்டுடன் இரண்டாம் ஆண்டை நிறைவு செய்யும் அறுபது வரையான பயிற்சியாளர்கள் பிரான்சு நாட்டில் 28 ஏப்ரல் 2018 அன்று அனைத்து நாட்டு பயிற்சியாளர்களுடன் நடைபெறும் தமிழ் இலக்கியமாணி பட்டமளிப்பில் கலந்துகொள்ளவுள்ளமை மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. இது ஆசிரிய வளத்தை மேம்படுத்த உதவுவதுடன் எதிர்கால தமிழ்க்கல்விக்கான முதலீடாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

பயிற்சிச்செயலமர்வின் நோக்கம் 1

உள்ளடக்கம் 2

தமிழர் கல்வி மேம்பாட்டுப்பேரவையின் வாழ்த்துச்செய்தி 3

பயிற்சிச்செயலமர்வுகளின் நிகழ்ச்சி நிரல்கள் .... 4 - 5

ஆசிரியரியல் 6

புலம்பெயர் நாட்டுச் சூழலில் தமிழ் கற்பித்தல் 7

தமிழ் இலக்கியமாணி கற்கைநெறி .... 8 - 9

மழலையர் நிலை கற்பித்தலுக்கான வழிகாட்டல்கள் 10

பாலர் நிலை கற்பித்தலுக்கான வழிகாட்டல்கள் 11

வளர்தமிழ் 1 கற்பித்தலுக்கான வழிகாட்டல்கள் 12

புலன்மொழிவள விருத்தி - கேட்டல் திறன் 13

புலன்மொழிவள விருத்தி - பேசுதல் திறன் 14

புலன்மொழிவள விருத்தி - வாசித்தல் திறன் 15

புலன்மொழிவள விருத்தி - எழுதுதல் திறன் .... 16 - 19

தமிழ் இலக்கியம் 20

தமிழ் இலக்கணம் .... 20 - 21

வரலாறு .... 22 – 23

அனைத்துலகப் பொதுத்தேர்வு 2017 வினா-விடைத்தாள்களின் பார்வைகள் .... 24 - 27

G.C.E (0/L, A/L) - Cambridge Board Exam தேர்வுகள் பற்றி .... 28 - 30

தமிழ்த்திறன் போட்டிகள் - பேச்சு, திருக்குறள், கட்டுரை & கவிதை 31

குறிப்புகளுக்காக 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

வாழிய நீடு

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்

மண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ் என பாவேந்தரால் போற்றப்பட்ட தமிழ் மொழியே எங்கள் தாய்மொழியாகும்.

கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் என

பலமொழிகளுக்கு தாய்மொழியாக இருந்தும் தன் தனித்துவத்தை இழக்காத சிறந்த மொழியாக விளங்குவது நம் தமிழ்மொழி. கம்பனை வள்ளுவனை இளங்கோவை உலகமகா கவிஞர்களாக உலகுக்குத் தந்த மொழி எங்கள் மொழி. தமிழே மிகவும் பண்பட்ட மொழி தனக்கே உரிய வளம்வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி என்றார் மாக்ஸ் முல்லர். உலக அறிவை உணர்த்தும் சிறப்பில் திருக்குறளுக்கு நிகராக இலக்கிய உலகில் வேறெந்த மொழியும் இல்லை என்றார் அல்பேட் சுவைட்சர்.

உயிர்ப்பொடும், ஊட்டத்தொடும், செம்மாப்பொடும், சீரொடும், சிறப்பொடும் நீடு நின்று நிமிர்ந்தெழுந்து நடைசிறந்து இயங்கிவரும் எம் தாய்த் தமிழைப் போற்றிக்காக்கும் பணியை செவ்வனே செய்கின்ற தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பிரித்தானியக் கிளை 90 க்கு மேற்பட்ட பள்ளிகளையும் 7500 மாணவர்களையும் 700 ஆசிரியர்களையும் உள்ளடக்கிய தமிழ்த்தேசியத்தின் பாரிய கட்டமைப்புகளில் ஒன்று என்பதைக் கூறிக்கொள்வதில் கல்வி மேம்பாட்டுப் பேரவை பேருவகை அடைகின்றது.

"நன்னிலை உனக்கெனில் எனக்குந்தானே" என்ற தன்மானத் தமிழ்ப் புலவர் பாவேந்தரின் வரிகளுக்கிணங்க மொழி இன்றேல் இனமில்லை என்பதறிந்து எம் இனம் வீழ்ந்து விடக்கூடாது என்ற உயரிய நோக்குடன் தமிழ்ப் பணி ஆற்றுகின்ற தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பிரித்தானியக் கிளை தன் இன உணர்வையும் மொழியுணர்வையும் வெளிக்காட்டி நிற்கின்றது. வாழ்க உங்கள் தமிழ்ப் பணி!!!

திருமதி. நகுலா அரியரத்தினம்
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
24.10.2017

TEDC

TEDC 4 av des primeveres 77290 Mitry mory France tel : 0033980861842
n° Siret 500 943 436 00013. email: info tedc@gmail.com web: tamiledc.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழே எங்கள் உயிர் TAMIL IS OUR LIFE

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஐக்கிய இராச்சியம்

Tamil Education Development Council-United Kingdom

வளர்தமிழ் பாடநூல் ஆசிரிய பயிற்சிப்பட்டறை 2017 / 2018

நாள் 1 : 28.10.2017 : வளர்தமிழ் மழலையர்நிலை முதல் வளர்தமிழ் 4 வரை

நாள் 2 : 29.10.2017 : வளர்தமிழ் 5 முதல் வளர்தமிழ் 12, Tamil Language Cambridge GCE O/L & A/L Exams

இடம் : Alperton Community School, Lower School, Ealing Road, Wembley, Middlesex, HA0 4PW

நிர்வாகிகள் சந்திப்பு நேரம் : காலை 09:00 – 10:30

நாள் 1: 28.10.2017 சனிக்கிழமை நேரம் :10:30 – 18:00 வளர்தமிழ் மழலையர்நிலை முதல் வளர்தமிழ் 4 வரை

நாள் 1: மழலையர் நிலை முதல் வளர்தமிழ் 4 வரை

1. பதிவுகள்	09:00	
2. காட்சிப்படுத்தல்- பார்வையிடல்	09:00 – 10:30	
3. அகவணக்கம்	10:30	
4. ஆசிரியர் அறிமுகம் (பள்ளி அடிப்படையில்)	10:35 – 10:50	
5. ஆசிரியர் செயலமர்வின் நோக்கம்	10:50 – 10.55	
6. வளர்தமிழ் பாடநூல் விளக்கம்	10:55 - 11:10	
7. ஆசிரியரியலும் பாட அணியமும்	11:10 - 11:35	
8. மழலையர் நிலை, பாலர் நிலை	11:35 - 12:25	
9. உணவு இடைவேளை	12:25 -	12:55
10. தேர்வுத்தாள் திருத்தும் பணிக்கான மதிப்பளிப்பு	12:55 -	13:00
11. தமிழ் இலக்கியமாணி	13:00 -	13:10
12. கேட்டல் திறன் வளர்தமிழ் 1 முதல் 4 வரை	13:10 -	13:45
13. பேசுதல் திறன் வளர்தமிழ் 1 முதல் 4 வரை	13:45 -	14:20
14. தமிழ்த்திறன் போட்டிகள் 2017	14:20 -	14:30
15. தேர்வு வினா/விடைத்தாள் 1 இன் பார்வை	14:30 -	14:50
16. வாசித்தல் திறன் வளர்தமிழ் 1 முதல் 4 வரை	14:50 -	15:25
17. எழுதுதல் திறன் வளர்தமிழ் 1 முதல் 4 வரை	15:25 -	16:20
18. தேர்வு வினா/விடைத்தாள் 2, 3, 4 இன் பார்வை	16:20 -	16:40
19. மழலையர் முதல் வளர்தமிழ் 4 வரையான கலந்துரையாடல்	16:40 -	17:20
20. கருத்துக்கணிப்பு	17:20 -	17:25
21. தொகுப்புரை	17:25 -	17:35
22. சான்றிதழ்கள் வழங்கலுடன் நிறைவு	17:35 -	18:00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழே எங்கள் உயிர் TAMIL IS OUR LIFE

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை– ஐக்கிய இராச்சியம்

Tamil Education Development Council-United Kingdom

வளர்தமிழ் பாடநூல் ஆசிரிய பயிற்சிப்பட்டறை 2017 / 2018

நாள் 2: 29-10-2017 ஞாயிற்றுக்கிழமை **வளர்தமிழ் 5 முதல் வளர்தமிழ் 12, Cambridge GCE O/L & A/L Tamil Exams**

1.	பதிவுகள்	08:30		
2.	காட்சிப்படுத்தல்	08:30	-	09:00
3.	அகவணக்கம்	08:55		
4.	ஆசிரியர் அறிமுகம் (பள்ளிகளின் அடிப்படையில்)	09:00	-	09:10
5.	ஆசிரியர் செயலமர்வின் நோக்கம்	09:10	-	09:15
6.	வளர்தமிழ் பாடநூல் விளக்கம்	09:15	-	09:30
7.	வளர்தமிழ் 5 & 6	09:30	-	10:05
8.	மொழிமாற்றம் - கற்பித்தல்	10:05	-	10:15
9.	இலக்கணம் 1	10:15	-	10:40
10.	இலக்கியம்	10:40	-	11:20
11.	கட்டுரை	11:20	-	12:10
12.	உணவு இடைவேளை	12:10	-	12:40
13.	தேர்வுத்தாள் திருத்தும் பணிக்கான மதிப்பளிப்பு	12:40	-	12:50
14.	GCE O/L & GCE A/L	12:50	-	13:20
15.	வரலாறு	13:20	-	14:05
16.	தமிழ் இலக்கியமாணிக் கல்வி	14:05	-	14:45
17.	தமிழ்த்திறன் போட்டிகள் 2017	14:45	-	14:55
18.	இலக்கணம் 2	14:55	-	15:20
19.	வளர்தமிழ் 5–12 தேர்வு வினா/விடைத்தாள்களின் பார்வை	15:20	-	16:00
20.	வளர்தமிழ் 5 முதல் 12 வரை கற்பித்தல்-கலந்துரையாடல்	16:00	-	16:35
21.	கருத்துக்கணிப்புடன் தொகுப்புரை	16:35	-	16:45
22.	சான்றிதழ்கள் வழங்கலுடன் நிறைவு	16:45	-	17:00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரியல்

ஆசிரியர்

- ஒரு ஆசிரியர் முதலில் தன்னை அறிதல் வேண்டும்.
- எந்தப் பகுதியில் ஆசிரியர் கற்பிக்கின்றாரோ அந்தப் பகுதியில் ஆர்வமாகவும், கற்பிப்பதில் விருப்பு உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- மாணவரின் நிலையை அறிந்து (மெல்லக் கற்போர, சராசரியாக கற்போர், விரைந்து கற்போர்) தான் கற்பிக்கும் பாடத்தை திட்டமிட்டு பாடக் குறிப்புகளோடும் தேவைப்படும் துணை உபகரணங்களைக் கொண்டு அவர்கட்கு ஏற்ற வகையில் பாடத்தை அணியம் செய்தல் வேண்டும்.
- சரியான நேரத்திற்கு வகுப்பறைக்கு சென்று மாணவர்களுக்குப் பாடத்திட்டம், பாடக்குறிப்பு, ஆகியவற்றைப் பயன்படுத்தி மிகத் தெளிவாகப் பாடத்தைக் கற்பிக்க வேண்டும்.
- பாடம் தொடங்க முன் மாணவர்களை வகுப்பறைச் சூழலுக்குள் கொண்டு வருதல் வேண்டும்.
- மாணவர்களுடன் அன்பு, கனிவு, சிறிதளவு கண்டிப்புடன் சிரித்த முகத்துடன் இருத்தல் வேண்டும்.
- மாணவரின் மட்டத்துக்கு ஆசிரியர் இறங்கி கற்பிக்க வேண்டும்.
- மாணவர்களுக்குப் பாடத்தில் ஏற்படும் ஐயப்பாடுகளைத் தெளிவு படுத்த வேண்டும்.
- கற்பிக்கும் நேரத்தை விடவும் மாணவர்களுக்குக் கற்றலில் மேலதிக உதவி தேவைப்பட்டால் அதைச் செய்வதற்கு அணியமாக இருத்தல் வேண்டும்.
- ஆசிரியருக்குத் தமிழ் உச்சரிப்பும் உரத்த குரல்வளமும் அவசியம்.
- மாணவரின் வீட்டுவேலைகளை பாடநேரம் தவிர்ந்த நேரங்களில் திருத்தி, பெற்றோருடன் தொடர்பு கொண்டு ஊக்குவித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் பெயர் நாட்டுச் சூழலில் தமிழ் கற்பித்தல்

- கிழமையில் ஒருநாளில் குறைந்தளவு நேரமே தமிழ் கற்பிக்கப்படுகிறது.
- பெற்றோரது பங்களிப்பு- பெற்றோர் தங்களது ஏனைய வேலைகளை விட்டுக்கொடுத்து தமிழ்ப் பள்ளிக்குத் தம் பிள்ளைகளை அழைத்து வருகின்றனர்.
- கிழமையில் ஐந்து நாட்களும் தமது முழுநேரப் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் ஆறாவது நாளாகவும் தமிழ்ப் பள்ளிக்கு வருகின்றனர். தமது வேறு செயற்பாடுகளை விட்டுக் கொடுத்து தமிழைக்கற்க வருகின்றனர்.
- மேல் வகுப்பு மாணவர்களுக்கு தமது பள்ளியில் ஏனைய பாடங்களின் சுமையும் அழுத்தமும் அதிகம்.
- வளர்தமிழ் நூல்களைப் பயிலும் மாணவர்கள் GCE (O/L) CAMBRIDGE தமிழ்த் தேர்வுக்குத் தோற்ற முடியும். அத்துடன் அவர்களின் பல்கலைக்கழக புகுமுகத்திற்கு GCE (A/L) CAMBRIDGE தமிழ்த் தேர்வுப் பெறுபேறுகளும் புள்ளிகளும் உதவுகின்றன.

புலம்பெயர் சூழலில் வாரம் ஒரு நாள் மட்டும் தமிழைக் கற்கும் சிறார்களுக்கு எளிதில் அவர்களுக்குப் புரியுமாறு, செயலூக்கம் உடையதாகக் கற்பிற்பதற்கான உத்திகள்.

சிறார்கள்7 அடிப்படையான கற்றல் முறைகளைக் கொண்டிருக்கிறார்கள்.

- கண்டுணர்தல்.
- கேட்டுணர்தல்.
- சொற்களை உள்வாங்குவதன் மூலம் கற்றல்.
- தொட்டுணர்தல்.
- அறிவுபூர்வமான/தர்க்கபூர்வமான வழிக் கற்றல்.
- குழும உளப்பகுப்பாய்வின் மூலம் கற்பவர்.
- தனித்த/தனிமையாகக் கற்பவர்.

- **கண்டுணர்தல்:** கட்புலனால் ஒரு விடயத்தைப் பார்த்து உணர்வதன் மூலம் அவ் விடயமானது மூளையில் பதிக்கப்படுகிறது. அதற்காக படங்கள்,உருவங்கள்,மாதிரிப் பொருட்கள் என்பன காட்சிப்படுத்தப்படுகின்றன.
- **கேட்டுணர்தல்:**வேறுபட்ட ஒலிகள்,இசை என்பனவற்றை இன்னெனவென இனங்கண்டு பதித்தல். இதற்காக இசைக்கருவிகள்,ஒலிவட்டு என்பன பயன்படுத்தப்படுகின்றன.
- **சொற்களை உள்வாங்குவதன் மூலம் கற்றல்:**இத்தகைய மாணவர்கள் சொற்களை இனங்காண்பதன் மூலம் அல்லது சொற்களை/சொல்லியங்களை எழுதுவதன் மூலம் கற்கின்றார்கள்.இதற்கிணங்க எழுத்துக்கள்,சொல்லியங்கள் காட்சிப்படுத்தலுடன் கற்பிற்போர் மாணவர்களுடன் தொடர்ந்து உரையாடல் வேண்டும்.(ஒலிவட்டு பயன்படுத்தல்.)
- **தொட்டுணர்தல்:**உண்மையான பொருட்களையோ அல்லது மாதிரி வடிவங்களையோ தொட்டு, உணர்ந்து உள்வாங்குவதன் மூலம் கற்கின்றார்கள். காட்சிப்படுத்தல்,மாதிரி செயன்முறையின் பயன்பாடு மிக முக்கியமானது.
- **அறிவுபூர்வமான/தர்க்கபூர்வமான வழிக் கற்றல்:**இத்தகைய மாணக்கர் எல்லாவற்றையும் நம்பத் தகுந்த தரவுகள்,ஆய்வுகள் மூலமாக தர்க்க ரீதியான முறையில், காரணம் கண்டு கற்பதன் உள்வாங்கிக் கொள்வார்கள். ஆசிரியர் கற்பிக்கத் தொடங்குவதற்கு முன்னதாக தன்னைத்தன்னை முழுமையாகத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.கற்பிக்கும் பாடத்தில் பூரண அறிவு வேண்டும்.
- **குழும உளப்பகுப்பாய்வின் மூலம் கற்பவர்:**இம் மாணவர் மற்றைய மாணவர்களுடனான உரையாடல்,அவர்கள் பேச்சைக் கேட்டல்,அவர்களுடன் பேசுதல் மூலம் விடயத்தைப் புரிந்து கொண்டு தனது கருத்தை வெளிப்படுத்துதல். சிறிய சிறிய குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கற்பிக்கும் பாடம் விடயமாக குழுக்களாக கலந்துரையாடல்.குழுக்களாக செயன்முறைப் பயிற்சி செய்தல்.
- **தனித்த/தனிமையாகக் கற்பவர்:**இத்தகைய மாணவர் தனக்குத்தானே பாடங்களைக் கற்றுக்கொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

பட்டயக் கல்வி நிறுவகம்

தமிழ் இலக்கிய மாணி
BTL

பட்டயக் கல்வி - ஈராண்டுக் கற்கைநெறி

நோக்கம்:-
- புலம்பெயர் தேசமெங்கும் தமிழ்மொழியறிவை வளர்த்தலும், வளப்படுத்தலும்.
- இளந்தலைமுறையினருக்குத் தமிழைக் கற்பிப்பதற்கான தகுதியான ஆசிரியர்களை உருவாக்குதல்.
- கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பாடநூல்களின் தெளிவான விரிவாக்கத்தை உள்ளடக்கிய அறிவை வளர்த்தல்

குறிக்கோள்:-
- இயன்றவரை நற்றமிழில் கல்விகற்றல்/ கற்பித்தல்.
- எம் இனத்தின் மொழி பண்பாட்டு இலக்கிய விழுமியங்களை உலகம் முழுமைக்கும் ஒரே தன்மைத்தான சமச்சீர் கல்வி மூலம் பரப்புதல்.
- இன்றைய காலச்சூழலுக்கான இனஞ்சார்ந்த அரசியல் அறிவையும் பண்டைய அரசியல் வரலாற்றையும் அறியச் செய்து மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் இனப்பற்றையும் வளர்த்தல்.

முதலாம் கல்வியாண்டுக்கான பாடத்திட்டம் :

1. தமிழ்மொழி - உரைநடைநூல்
2. இலக்கியநயம் - உரைநடை நூல்
3. திருக்குறளும் வாழ்வியலும்
4. ஔவையும் அருந்தமிழும்
5. பட்டினப்பாலை
6. சிலப்பதிகாரம் - புகார்க்காண்டம் - மூன்று காதைகள்
7. தமிழ் இலக்கணம் - பகுதி - 1

எங்கள் மொழியறிவையும் சுவையையும் கடந்தகால வரலாற்றின் உண்மைத் தன்மையையும் எம் இன விடிவு நோக்கிய தமிழ்மொழிக் கல்வியையும் கற்பதற்குத் தாயகத்திலும் தமிழகத்திலும் உரிமை மறுக்கப்பட்டுள்ள நிலையில் இக்கற்கை நெறிக்கான நூல்களைக் கல்வி மேம்பாட்டுப் பேரவை அணியம் செய்து வழங்கும்.

முதலாமாண்டு தேர்வுக்கான கற்கை நூல்கள் ஏற்பிசைவுப் படிவத்துடன் வழங்கப்படும். இக்கற்கை நெறிக்கான விரிவுரைகளை நடத்துவதற்கு தகமையுடைய விரிவுரையாளர்களைக் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஒழுங்கு செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
பட்டயக் கல்வி நிறுவகம்

இரண்டாம் கல்வி ஆண்டிற்கான கற்கை நூல்கள்

இரண்டாம் கல்வியாண்டுக்கான பாடத்திட்டம் :

1. கழக இலக்கியம் - அகத்திணை
2. கழக இலக்கியம் - புறநானூறு
3. இக்காலக் கவிதைகள்
4. தமிழ் இலக்கிய வரலாறு
5. வரலாறு சொல்லும் பாடம்
6. இராவண காவியம்
7. தமிழ் இலக்கணம் - பகுதி - 2

ஆய்வுக் கட்டுரை : ஒரு தலைப்புக் குறித்து ஆய்வு செய்து 3000 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதி வழங்க வேண்டும்.

ஓர் இனத்தின் பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும், நாட்டுக்கும் அடிப்படையாக இருப்பது மொழி. மொழிப்பற்று இல்லாதவருக்கு நாட்டுப்பற்றும் இருக்காது. மொழியில் பற்றுக்கொள்ளாத இனம் தன் மொழியையும், நாட்டையும், பண்பாட்டையும், முகவரியையும் இழந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விடும். அப்படி அழிந்து ஒழிந்து போன வரலாறுகள் உலகில் பல உண்டு. மொழி இன்றேல் இனமில்லை என்பதறிந்து எம் இனம் வீழ்ந்து விடக்கூடாது என்ற உயரிய நோக்குடன்
உருவாக்கப்பட்ட கற்கை நெறிதான் இப் பட்டயக் கல்வி. கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் தொடங்கப்பட்டுள்ள இப்பட்டயக் கல்வியைத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பாடநூல்களைப் பயன்படுத்துகின்ற அனைத்து ஆசிரியர்களும் 12-ம் வகுப்பில் கற்றுத் தேர்ந்த மாணவர்களும் கற்றுத் தங்களின் தமிழ்ப் பணியைத் தடையின்றித் தொடர வேண்டும்.

தமிழ் இலக்கியமாணி பட்டமளிப்புவிழா 2018

தமிழ் இலக்கியமாணி பட்டப்படிப்பில் இரண்டாம் ஆண்டு நிறைவு செய்தவர்களுக்கான பட்டமளிப்பு

காலம் - 28.04.2018 சனிக்கிழமை இடம் : பிரான்சு நாட்டில் அனைத்துலக பயிற்சியாளர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலையர் நிலை

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ

க்	க
ங்	ங
ச்	ச
ஞ்	ஞ
ட்	ட
ண்	ண
த்	த
ந்	ந
ப்	ப
ம்	ம
ய்	ய
ர்	ர
ல்	ல
வ்	வ
ழ்	ழ
ள்	ள
ற்	ற
ன்	ன

+

+

மழலையர் நிலை — 49 எழுத்து உருவங்களை மனதில் உருவங்களாக மனப்பதிவு செய்வதுடன் ஒலிக்கப்பழகுதல்

வளர்தமிழ் வரிசையில் தொடக்க நூல் மழலையர் நிலை- பாடநூல், பயிற்சிநூல் ஒலிவட்டு பற்றிய தொகுப்பு

மழலையர் நிலை 4 அகவையுடைய பிள்ளைகளுக்கு உரியது. அவர்களது அறிவு வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சிக்கேற்ப இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல் 10 பாடங்களை உள்ளடக்கியது.

பொதுவாக இந்த அகவைக்குரிய பிள்ளைகள் விரும்பக்கூடிய விதத்தில் பாடங்கள் அமைந்துள்ளன. உரையாடல்கள், பாடல் பாடி ஆடுதல், கலந்து பேசுதல், புள்ளிகளை இணைத்தல், வண்ணம் தீட்டுதல், விளையாடுதல் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.

மொழி சார்ந்த கேட்டல், கலந்துரையாடல், பேசுதல், ஒலித்தல், எழுதுதல் (கைப்பயிற்சி, எழுதுகோல் பயிற்சி) ஆகிய திறன்களை வளர்க்க, மேம்படுத்த இந்நூல் உதவும். பல உருவங்களோடு **49 எழுத்துருவங்களையும்** பிள்ளைகள் மனதில் பதிப்பர். இவற்றை இனம் கண்டு ஒலிக்கவும் அறிந்து கொள்வர். 49 எழுத்துருவங்களில் ஒரு பாடத்திற்கு 4 எழுத்துருவங்களாக **இனங்கண்டு ஒலிக்கப் பழகுவர்.**

இங்கு **49 எழுத்துருவங்களாக கற்கும்** எழுத்துகள் பின்வருமாறு:

உயிர் எழுத்துகள்	12 -	அ - ஔ
மெய் எழுத்துகள்	18 -	க் - ன்
அகரம் ஏறிய மெய் எழுத்துகள்	18 -	க - ன
ஆய்த எழுத்து	01 -	ஃ
மொத்தம்		**49**

இவ் எழுத்துருவங்களை மாணவர்கள் இலகுவாக கற்பதற்கேற்ப ஒழுங்கு மாற்றி ட, ட் இலிருந்து தொடங்கி கற்பிக்கப்படுகின்றது. புதிய பாடநூல்களில் **கற்பித்தற் குறிப்புகள், நோக்கம், அடைவு** என்பன ஒவ்வொரு பாடங்களிலும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆசிரியர்கள், பெற்றோர்கள் உரிய முறையில் பயன்படுத்தி கற்பித்தலை நன்கு எடுத்துச் செல்ல முடியும்.

மழலையர் நிலை

- படங்களுடன் ஒலிவடிவத்தையும் சேர்த்துக் கற்பித்தல்.எ-கா: பூனை – 'மியா..' ஒலி
- கதைகளை அவற்றின் ஏற்ற இறக்கத்துடன் கூறுவதுடன் நடித்துக் காட்டுதல்.
- கதைகள், பாடல்கள், பாடப்பகுதிகளை செயலில் காட்டுதல், ஒலி, காணொளித் திரையில், காட்சிப்படுத்தல், வண்ணப்படங்கள் மூலமும் காட்டி மனதில் நிலைநிறுத்தத் தூண்டுதல்.
  எ-கா: உணவுகள், உருவங்கள் போன்ற பாடத்தலைப்பிற்கேற்ப காட்சிப்படுத்தல் காணொளி கதைகள், எழுத்துகள் மூலமும் பெற்றோர் மேற்பார்வையில் காட்டலாம்.
- எழுத்துகளைப் பெரிதாக அட்டையில் எழுதிக் கற்பித்தல்.
- எழுத்தட்டைகளைக் கொண்டு விளையாட்டின் மூலமும் மனப்பதிவு செய்யத்தூண்டுதல்

☞ - **முக்கிய குறிப்பு:-**

மழலையர்நிலை மாணவர்கள் எழுத்துகளை இனம்கண்டு ஒலிக்கத்தெரிதல் என்பதை தொடர் மதிப்பீட்டின் மூலம் அறியலாம். இவர்களுக்கான பாடங்கள் 49 எழுத்துகளும் மாணவருக்கு இனங்காணத் தெரிகின்றதா, ஒலிக்கத் தெரிகின்றதா என மதிப்பீடு செய்யப்படும். அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்களவு எழுத்துகள் தெரிந்தவர்கள் மட்டுமே பாலர்நிலை வகுப்புக்குச் செல்லத் தகுதிநிலை பெற்றிருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர்நிலை

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ

க்	க
ங்	ங
ச்	ச
ஞ்	ஞ
ட்	ட
ண்	ண
த்	த
ந்	ந
ப்	ப
ம்	ம
ய்	ய
ர்	ர
ல்	ல
வ்	வ
ழ்	ழ
ள்	ள
ற்	ற
ன்	ன

+

+

மழலையர் நிலையில் 49 எழுத்து உருவங்களை மனதில் உருவங்களாக மனப்பதிவு செய்து
ஒலிக்கப்பழகிய மாணவர்கள் பாலர்நிலையில்
49 எழுத்துகளை வரிவடிவமாக எழுதவும் 49 எழுத்துகளுக்கு உட்பட்ட சொற்களை எழுதவும், வாசிக்கவும் பழகுவர்

வளர்தமிழ் வரிசையில் பாலர்நிலை பாடநூல், பயிற்சிநூல், ஒலிவட்டு பற்றிய தொகுப்பு
பாலர்நிலை, மழலையர்நிலையின் தொடர்ச்சியாக மிகப்பொருத்தமான 12 பாடங்களை உள்ளடக்கியுள்ளது. நூலின் தொடக்கம் மழலையர் நிலையில் இருந்து வரும் பிள்ளைகளுக்கு ஒரு மீட்டலாக அமைகிறது. வாழிடச் சூழலுக்கு ஏற்பவும் அதே நேரத்தில் எமது தாய்மொழி சார்ந்த திறன்களை மேம்படுத்தும் வகையிலும் 5 அகவையுடைய பிள்ளைகளுக்குரியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. மழலைநிலையில் 49 எழுத்துருவங்களையும் இனங்கண்டு ஒலிக்கப்பழகியவர்கள், இந்நிலைக்கு வந்தவுடன் அதனை ஒலித்தக்கொண்டு வரி வடிவாக எழுதவும் (பலுக்குதல் - எழுதுதல்) அந்த எழுத்துகளுக்குட்பட்ட சொற்களை உருவாக்கவும் வாசிக்கவும் பழகுகின்றனர். பாலர்நிலையில் 12 பாடங்களையும் கற்றதன் பின்னர் தமிழ்ச் சொல்வளம் கேட்டல் பகுதியினூடாக வளர்ந்து காட்சியினூடாக பேசவும் வைக்கின்றது.
அத்துடன் 49 எழுத்துகளுக்குட்பட்ட எந்த சொற்களையும் எழுதவும் வாசிக்கவும் பழகியிருப்பர். வளர்தமிழ் 1 வகுப்புக்குச் செல்லத் தகுதிநிலை பெற்றிருப்பர்.

மழலையர்நிலையில் 49 எழுத்து உருவங்கள், பாலர்நிலையில் 49 எழுத்துகள் வரிவடிவமாகி வளர்தமிழ் 1 இல் 247 எழுத்துகளைப் படித்து வருகின்றனர்.

புதிய பாடநூல்களில் கற்பித்தற் குறிப்புகள் நோக்கம், அடைவு என்பன ஒவ்வொரு பாடங்களிலும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆசிரியர்களும் பெற்றோர்களும் உரிய முறையில் பயன்படுத்தி கற்பித்தலை நன்கு எடுத்துச் செல்ல உதவ முடியும்.

பாலர்நிலை

- பாடலை அபிநயத்துடன் (நடன அசைவுடன்) பாடிக் காட்டுதல்.
- மாணவர்களுடன் அகச்சூழல், புறச்சூழல் பற்றிக் கலந்துரையாடல். இதன்மூலம் சொற்களஞ்சியத்தைக் கூட்டுதல்.
- காலத்திற்கேற்ப கற்பிக்கும் விடயங்களை தெரிவு செய்து கற்பித்தல்.
- படம் பார்த்துக்கூறுதலில் படம், சொல் இரண்டையும் படமாகவே அவர்கள் மனப்பதிவு செய்ய வைத்தல்
- எழுத்துக்களை பெரிதாக எழுதி அவற்றின் உறுப்பமைப்பை உணரவைத்தல்.
- தனித்தனி எழுத்தாக உச்சரித்து சொல்வதெழுதுதலைப் பழக்கல்.
- எழுத்தினை உச்சரித்துப் பார்த்து புதிய சொல்லையும் வாசிக்கப் பழகல்.
  உ +ம்- ஊ ர் வ ல ம் -------- ஊர் வலம் ------ ஊர்வலம்
- பலதடவை எழுதவைத்தல் இ, ழ போன்ற எழுத்துகள்.

☞ - முக்கிய குறிப்பு:-
பாலர்நிலை மாணவர்கள் 49 எழுத்துகளை இனம்கண்டு ஒலிப்பதோடு அதனை வரிவடிவமாக எழுதவும், எழுத்துகளுக்கு உட்பட்ட சொற்களை எழுதவும், வாசிக்கவும் தெரிந்து கொள்கின்றனர். **இதில் குறிப்பிடத்தக்களவு அடைவுகளைப் பெற்ற மாணவர்களே கல்வியாண்டு முடிவில் வளர்தமிழ் 1 ற்கு மாற்றப்படுவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்தமிழ் 1



வளர்தமிழ் 1 அகவை 6 மாணவர்களுக்கு உரியது.

வளர்தமிழ் 1 இல் 14 பாடங்கள் மட்டுமே உள்ளன. மாணவர்களுக்குத் தேவையான விளக்கங்கள் மிகத்தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. பாலர்நிலையில் 49 எழுத்துகளை ஒலிவடிவம், வரிவடிவமாகக் கற்ற மாணவர்கள் வளர்தமிழ் 1 இல் 247 எழுத்துகளைக் கற்பர்.

பாடம் 1, பாலர்நிலையில் இருந்து வந்த மாணவர்களுக்கு ஒரு மீட்டலாக அமைகிறது. ஒரு பாடத்துக்கு ஓர் எழுத்தாக (அகரம் ஏறியமெய்யெழுத்துகள்) 12 பாடங்களில் நெடுங்கணக்கு எழுத்துகளைக் கற்கின்றனர்.

தமிழ்மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் திறன்களை மாணவர்கள் பெற்றுக்கொள்ள சிறப்பான பயிற்சிகள் உள்ளன. மாணவர்கள் பயன்பெற சொல்லுருவாக்கும் திறன், சொல்லியம் அமைத்தல், பலுக்குதல், வாசித்தல் பயிற்சிகள், பேசுதலுக்கான வண்ணப்படங்கள், ஒலிவட்டில் பாடல், மேலதிக சொற்கள், கதைகள், உரையாடல் என்பன இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

பயிற்சி நூலில் விடுகதைகள், திருக்குறள்கள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாடத்தலைப்புகள், வண்ணப்படங்கள் மாணவர் விரும்பிக் கற்கக்கூடிய விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்திலும் பாடத்தின் நோக்கம், அடைவு என்பன ஆசிரியருக்குரிய கற்பித்தற் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் கற்கவேண்டிய எழுத்துகள் வண்ணங்களால் காட்டப்பட்டுள்ளன. அத்துடன் வளர்தமிழ் 1 இல் இருந்து தான் மாணவர்கள் அனைத்துலகத் தமிழ்த்தேர்வுக்கு அணியமாகின்றனர். அரையாண்டுத் தேர்வுக்கு 7 பாடங்கள் வரை கற்பிக்க வேண்டும்.

வளர்தமிழ் 1

- ஒலி வேறுபாட்டை சரியான உச்சரிப்புடன் கற்பித்தல்.
- ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஓசையினை அறிமுகப்படுத்த வேண்டும். பின் பொருத்தமான குறில் நெடில் ஓசைகளைச் சேர்த்துக் கற்பிக்கவேண்டும்.
- எழுத்துகளை எண்ணப் பழக வேண்டும். (மெ — ஓர் எழுத்து)
- எழுத்துப் பயிற்சியும் உச்சரிப்புப் பயிற்சியும் ஒவ்வொரு நாளும் கற்பித்தல் வேண்டும்.
- லகர ளகர ழகர, ரகர றகர, னகர ணகர வேறுபாடுகளை சரியான உச்சரிப்பின் மூலம் தெளிவுபடுத்தலாம்.
- வகுப்புத் தொடக்கத்தில் முதல் வகுப்பில் கற்றவற்றை மாணவரிடமே கேட்டு மீட்டல் செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலன்மொழிவளம்

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் திறன்களின் முக்கியத்துவம்.
சுயசிந்தனை, மொழித்திறன், தன்னம்பிக்கை, ஆளுமைவிருத்தி என்பவற்றை வளர்த்தல்.

ஆளுமை விருத்தி என்றால் என்ன?
ஒருவருடைய தனிப்பட்ட குணத் தொகுப்பு.

ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிவு, தீர்மானம் எடுத்தல், பிரச்சனைகளை விடுவித்தல், நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள், நுண்ணறிவு, நுணுக்கமான மாற்றம், பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் ஆகும்



மொழியின் கற்பித்தல் திறன்கள்

கேட்டல்

வளர்தமிழ்ப் பாடநூல்களினூடாக கேட்டல் திறனை வளப்படுத்தல்.

கேட்கிறதற்கும் கேட்டல் திறனுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

- ஒருவர் தன்னிச்சையாக செவிவழியாக வேறுபட்ட ஒலிகளை உள்வாங்குதல் கேட்டல் எனப்படும்.
- கவனக் குவிப்புடனும் மன ஒருமிப்புடனும் மூளையையும் மனத்தையும் பயன்படுத்தி குறிப்பிடப்பட்ட விடயத்தை உள்வாங்கிப் பதித்தல் கேட்டல் திறனாகும்.

தமிழ்மொழித் திறன்களில் கேட்டல் திறனின் அகத்தியம் என்ன?

- கேட்டல் திறனே ஒரு மொழியின் நான்கு திறங்களில் முதன்மையான திறனாகும்.
- நாம் பெரும்பான்மையான நேரத்தை கேட்பதிலேயே செலவு செய்கின்றோம்.
- கேட்டல் திறனே மற்றைய எல்லாத் திறன்களையும் முன்னெடுத்துச் செல்வதற்கு வழிவகுக்கின்றது.
- புதிய விடயங்களை அறிந்து கொள்ளல்.

கேட்டல் திறனை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான உபகரணங்களும் ஏதுக்களும் யாவை?
ஒலிவட்டு, பாடல்கள், கலந்துரையாடல், கதைகள், நாடகம், நொடிகள், வினாமாலை, விடுகதைகள், கணினி, பட்டிமன்றம் போன்றனவாகும்.

கேட்டல் திறனை மாணவர்களிடம் செவ்வனே கொண்டு செல்வதற்கு ஆசிரியர் எவ்வாறு தன்னை அணியம் செய்ய வேண்டும்?

- பாடத்திட்டம் தயாரித்தல்.
- வகுப்பு ஆரம்பமாகுவதற்கு முதலே ஒலிவட்டை நன்கு கேட்டு தன்னைத் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும்.

எவ்வாறு மாணவர்களை முழுமையான கேட்டலுக்கு அணியம் செய்யலாம்?

- புறச்சூழலும் அகச்சூழலும் அமைதியாக இருக்க வேண்டும்.
- மாணவர்களின் கவனம் ஒலிவட்டில் குவிக்கப்பட வேண்டும்.
- ஒலிவட்டு ஒலிக்கும் போது இடையில் குறுக்கிட்டுப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

வளர் தமிழ்ப்பாடநூல்த் தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ள ஒலிவட்டினைப் பயன்படுத்துவதன் நோக்கம் என்ன?

- புதிய சொற்களை அறிமுகப்படுத்துதல்.
- சொல்வளத்தை அதிகரித்தல்.
- சொற்களின் சரியான உச்சரிப்பை அறிந்து கொள்ளுதல்.
- பேசுவதற்குத் தூண்டுதல்.
- அந்த வகுப்பிற்குரிய கேட்டல் திறனை வளர்த்தல்.
- அதன் மூலம் பேசுதல்,வாசித்தல்,எழுதுதல் ஆகிய மற்றைய திறன்களை வளர்த்தல்.
- பல்வகையான தொடர்பாடல் வெளிப்பாடுகளை அறிதல்.

எவ்வாறு அவ்வொலிவட்டைப் பயன்படுத்தலாம்?

- ஒலிவட்டை முழுமையாகக் கேட்டல்.
- பின்னர் இடையிடையே நிறுத்தி விளக்கம் தேவைப்படின் விளக்கம் கொடுத்தல்.
- இறுதியில் இரண்டாம் முறை ஒலிவட்டைக் கேட்டல்.

நோக்கம் நிறைவேறியதா என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது?

- வினாக்களைத் தொடுத்தல்.
- அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்புக் கொடுத்தல்.
- பேசத் தயங்கும் மாணவர்களைப் பேசத் தூண்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுதல் திறன்

பேசுதல் திறன் ஏன் அவசியம்?

- சுயசிந்தனை வளர உதவுகிறது.
- பேசுதல் பயிற்சி ஏற்படுகிறது.
- தனது கருத்தைப் பிறருக்கு எடுத்துக் கூறும் ஆற்றல் வளர உதவுகிறது.
- பேசும் திறன் மூலம் இலக்கணம் தவறாமல் எழுதும் திறன் வளர்கிறது.
- மொழித்திறன் வளர்கிறது.
- பேசுதலின் மூலம் சொற்களஞ்சியத்தைக் கூட்டலாம்.

படம் பார்த்துப் பேசுதல்

மொழித்திறனில் ஒன்றான பேச்சுத்திறனை வளர்த்தல், வகுப்பு நிலைகளுக்கு ஏற்ப வளர்தமிழ்-1, வளர்தமிழ்-2, வளர்தமிழ்-3, வளர்தமிழ்-4 வரையில் உள்ள மாணவர்களிடம் ஆசிரியர் வினாக்களைக் கேட்பதன் ஊடாக அவர்களைப் பேசத் தூண்டல் ஆசிரியர் மாணவர் கலந்துரையாடல் இங்கு இன்றியமையாததாகும். பேசுவதுடன் மாணவர்கள் நின்று விடாமல் அவர்கள் எழுதத் தொடங்குகின்றனர். சொல், சொல்லியம், கதை கட்டுரை என்ற வகையில் படிப்படியாக வளர்ச்சியைப் பெறுகின்றனர்.

பேசுதல் திறன்

- வளர் தமிழ் 1 முதல் ஆண்டு 12 வரையான மாணவர்களுக்கு தமிழ் மொழித்திறன் விருத்திகளில் ஒன்றான பேசுதல் திறனை மேம்படுத்துதல். (பாடநூல் ஒலிவட்டு காணொளி படம் மூலம் காட்சிப்படுத்துதல்).
- பேசுதல் திறனின் நோக்கம் கற்பித்தலுக்கான முன் ஆயத்தம் செய்தல்.
- தேவையான உபகரணங்கள்.
- காட்சிப்படுத்தல்.
- காட்சிப்படுத்தப்பட்டதை அல்லது கேட்டதைப் பற்றி உரையாடுதல்.
- வினாக்கள் மூலம் மாணவர்களைப் பேசத்தூண்டுதல்.
- அருஞ்சொற்களை அறிமுகம் செய்தல்.
- மயக்கொலிகளைப் பலுக்கப் பயிற்சி கொடுத்தல்.
- பயின்றதைத் தொகுத்துக் கூறல்.
- மேலதிக பயிற்சி கொடுத்தல்.
- பாடத்துடன் தொடர்பான தேடலை ஊக்கப்படுத்துதல்.
- நோக்கம் நிறைவேறியதா என்பதை மதிப்பீடு செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தல்

"வாசிப்பதனால் மனிதன் முழுமை அடைகின்றான்"

வாசித்தலை மூன்று வகையாகப் பிரிக்கலாம் .

1.எளிதான வாசித்தல்.
2.கவிதை நயத்துடன் வாசித்தல்.
3.விருப்புடன் வாசித்தல்.

வாசிப்புத்திறனை மேம்படுத்த ....

***எந்த விடயம் மனதைக் கவர்கின்றதோ அந்த விடயத்தை வாசிக்கும்படி தூண்ட வேண்டும் .
***வாசிக்கும் போது உணர்ந்து வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டுவரவேண்டும்.
***எழுத்தைச் சரியாக இனங் கண்டு வாசிக்கச் செய்ய வேண்டும்.
***எழுத்தொலிகளை சரியாகப் பலுக்குவதற்கு உதவவேண்டும் .
***உறுதியாக வாசிக்க ஊக்கப்படுத்த வேண்டும்.
***நிறுத்தி வாசிக்கப் பழக வேண்டும்.

வாசிப்பதனால் ஏற்படும் திறன்கள்

***விளங்கும் திறனும் விளங்கியதை வெளிப்படுத்தும் திறனும் வளர்கின்றது.
***புதிய சொற்கள் அறியப்படுகின்றன.
***உய்த்துணரும் ஆற்றல் வளர்கின்றது.
***இலக்கணம் தவறாமல் எழுதும் திறன் மேம்படுகின்றது
***சரியான பலுக்குதல் வருகின்றது.
***சொற்களுக்கான கருத்து அறியப்படுகின்றது.

மயக்கொலிகளைப் பலுக்குதல்

லகர ளகர ழகர வேறுபாடு

லகரம் பலுக்கும் முறை

முன்புற நாக்குத் தடித்து மேல்வாய்ப் பல்லின் அடியைப் பொருத்த 'ல' ஓசை பிறக்கும்
எ + கா ;
கடல் , மடல் , வெல்லம்

ளகரம் பலுக்கும் முறை

முன்புற நாக்குத் தடித்து மேல்வாயின் முன்புறம் தடவ 'ள' ஓசை பிறக்கும்.
எ + கா ;
பள்ளி , வெள்ளம் , வேள்

ழகரம் பலுக்கும் முறை

மேல்வாயை நாக்கின் நுனி தடவ 'ழ' ஒலி பிறக்கும்
எ + கா;
மழை, பழம் , மகிழினி.

ந ன ண

தன்னகர னன்னகர ணகர வேறுபாடு

தன்னகரம் பலுக்கும் முறை

நுனி நாக்கு மேல் வாய்ப்பல்லின் அடியில் பொருந்துவதால் ' ந' ஒலி பிறக்கும்.
எ + கா;
நாக்கு, பெறுநர், நாவலன்.

னன்னகரம் பலுக்கும் முறை

மேல் வாயை நாக்கின் நுனி மிகப் பொருந்த ' ன' ஒலி பிறக்கும்.
எ + கா;
கன்னம் மன்னன்

ணகர ம் பலுக்கும் முறை

நுனி நாக்கு மேல் வாயின் நடுவில் தொட ' ண' ஒலி பிறக்கும்.
எ + கா;
அண்ணல், தண்மதி .

ரகர றகர வேறுபாடு

ரகரம் பலுக்கும் முறை

நாக்கின் நுனி மேல்வாய் ப் பல்லின் முன்புறத்தைத் தொட ' ர' ஒலி பிறக்கும்.
எ + கா;
வரம், கரம்

றகரம் பலுக்கும் முறை

மேல் வாயின் நடுப்பாகத்தை நாக்கை வளைத்துத் தொட்டு பலுக்க ' ற' ஒலி பிறக்கும்.
எ + கா;
பறவை திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுதல் திறன்

எழுத்தே ஒரு மொழிக்கு முதல் உறுப்பாகும். ஒலியின் வரிவடிவமே எழுத்தாகும். எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் அது சொல் எனப்படும்.
ஓரெழுத்து தனித்து நின்று பொருள் தருவது ஒரு மொழியாகும். தமிழில் 42 எழுத்துக்கள் தனித்து நின்று பொருள் தருவன.

1. மாணவர்கள் தமிழ் மொழியில் எழுதும்போது எழுத்துப் பிழை வரக் கரணியம் என்ன?

- எழுத்துகளைச் சரியாக இனங்காண முடியாமை
- சரியான பலுக்குதல் இன்மை
- வாசிப்புத் திறன் வளர்க்கப்படாமை
- போதிய எழுத்துப் பயிற்சி இன்மை
- ஆசிரியர் மாணவரின் திறனைச் சரியாக மதிப்பிடாமை
- பெற்றோரின் போதிய பங்களிப்பு இன்மை

2. ஆசிரியர்களாகிய நாம் இதற்கு என்ன செய்யலாம்?

- ஆசிரியர் சரியான முறையில் பலுக்குதலும் பயிற்சிவழங்கலும் எழுத்துகளை இனங்காண, வேறுபடுத்தப் பயிற்சி கொடுத்தல்
  எ கா – எழுத்தட்டைகள் காட்சிப்படுத்தல்

- குழு வேலைகள் முலம் சொல்லியம் அமைத்து மேம்படுத்தலாம்.
  மயக்கொலிகளை இனங்காணல் குறில் நெடில் வேறுபாடு, ஒத்த ஓசைச் சொற்கள்

- சொல்வதெழுதுதல் பயிற்சிகள் கொடுத்தல் வகுப்பு நிலைகளுக் கேற்ப சொற்களாகவும் பந்தியாகவும் கொடுத்தல்

- ஒரு மாணவரின் எழுத்துப்பிழைகளைத் தொடர் மதிப்பீடு செய்து மேம்படுத்தல் தேவை ஏற்படின் வாசிக்கும் போது குறில் நெடில் வல்லின மெல்லின இடையின எழுத்துகளுக்கு அழுத்தம் கொடுத்து உரக்க வாசிக்கச் செய்து தவறை உணர வைக்கலாம்.

- பெற்றோருடன் நல்லுறவைப் பேணி வீட்டில் பிள்ளைக்கு எழுத்துப் பயிற்சிக்காக உதவ வைத்தல்

வளர்தமிழ் 5 இலிருந்து
தலைப்பைத் தெரிந்தெடுத்து அந்த தலைப்பிற்குள் நின்று கட்டுரை எதுதப் பழகுவர்.

வளர்தமிழ் 4 இல்
படத்திற்கேற்ற கதையை கற்பனை வளம் கொண்டு பந்தி பிரித்து எழுதப் பழகுவர்.

வளர்தமிழ் 3 இல்
படத்தைப் பார்த்து ஐந்து சொற்களுக்கு குறையாத ஐந்து தொடர்ச் சொல்லியங்கள் எழுதப் பழகுவர்.

வளர்தமிழ் 2 இல்
படத்தைப் பார்த்து குறைந்தது நான்கு சொற்கள் கொண்ட சிறுசொல்லியங்கள் மூன்று எழுதப் பழகுவர்.

வளர்தமிழ் 1 இல்
247 எழுத்துகளை எழுதுவதோடு சொற்களை உச்சரித்து எதுதவும், படத்தில் தாம் கண்டவற்றை சொற்களாக எழுதவும் பழகுவர்.

பாலர்நிலையில்
49 எழுத்துகளை வரிவடிவமாக எழுதவும் அதற்கு உட்பட்ட சொற்களை உச்சரித்து எழுதவும் கற்றுக்கொள்வர்.

மழலையர்நிலையில்
49 எழுத்துருவங்களுக்கு ஒலித்துக் கொண்டு வண்ணம் தீட்டுவதன் மூலம் எழுதுகோல் பயிற்சியையும் கைப்பயிற்சியையும் கற்றுக்கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையியல்

* கட்டுரை எழுதும் திறனை வளர்த்தல்.
* வளர்தமிழ் 5இலிருந்து இடம்பெறுகிறது.
* மாணவர் தம் உள்ளத்தில் எழும் கருத்தைப் புரிந்து கொள்ளத்தக்கவாறு சொல் மரபுகளைப் பின்பற்றி நயம்பட வெளிப்படுத்துகின்ற ஆற்றல்.
* கட்டுரை எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.

1. **தலைப்பிடல்**
   மாணவர் தாம் தெரிவு செய்த தலைப்பை எழுத வேண்டும்.
2. **முகவுரை / தொடக்கம்**
   தலைப்பினை விளக்கும் வகையில் இருக்க வேண்டும். கட்டுரை முழுவதையும் படிக்கத்தூண்டும் வகையில் தொடக்கம் / முகவுரை அமைய வேண்டும்.
3. **கருத்துத் தொடர்பாடல்**
   தலைப்புச் சார்ந்து செய்திகளை ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தி எழுத வேண்டும்.
4. **தலைப்பினுள் அடங்கி எழுத வேண்டும்.**
   எடுத்துக் கொண்ட தலைப்பை விட்டு விலகாமல் எழுத வேண்டும்.
5. **மொழி வளம்**
   எழுதுகின்ற சொற்கள் வாசிப்போரின் மனதில் ஈர்ப்பை ஏற்படுத்தும் வகையில் இருக்க வேண்டும்.
6. **கற்பனை வளம்**
   விடயங்களை எடுத்துக் கூறுகின்ற விதம், கட்டுரை அமைப்பின் போக்கு.
7. **சொல்லியங்களைப் பிழையின்றி அமைத்தல்.**
   எழுவாயின் திணை, பால், எண், இடத்திற்கு ஏற்ற பயனிலையை அமைத்தல்.
8. **கூறியது கூறாமை**
9. **பந்தி பிரிப்பு**
   எல்லாப் பந்திகளும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தொடங்க வேண்டும்.
10. **எழுத்துப்பிழையின்மை**
    மயக்கொலி எழுத்துக்கள், குறில், நெடில் போன்றவை கூடுதல் பிழை விடும் பகுதிகள் ஆகும்.
11. **முடிவுரை**
    கட்டுரையின் கருத்துக்களை தொகுத்துக் கூறும் பகுதி. மாணவர் தமது சொந்தக் கருத்தைக் கூறுவதும் இதனுள் அடங்கும்.
12. **மை எழுது கோலினால் எழுத வேண்டும்.**
    ஓரளவு கேட்கப்பட்ட சொல் எண்ணிக்கைக்கு அமைய எழுத வேண்டும். மிகவும் கூட அல்லது மிகவும் குறைய எழுதினால் புள்ளிகள் குறையும்.

* கட்டுரை என்பது ஒரு தலைப்பின்கீழ் எழுதப்படுகின்ற சொல்லியங்களின் தொகுப்பு.
* வளர்தமிழ் 1 இலிருந்து படிப்படியாக முன்னேறிச் செல்கிறது.

கட்டுரை-125 சொற்கள்
கட்டுரை – 100 சொற்கள்
கட்டுரை – 60 சொற்கள்
பந்தி - கதை
தொடர்ச் சொல்லியங்கள் - 5
சிறு சொல்லியங்கள் - 3
சொற்கள்

* மாணவரின் மொழியறிவையும் எழுத்தாற்றலையும் வெளிப்படுத்தும் பகுதி.
* மாணவர்கள் 'கட்டுரை கடினம்' என்று கருதுவதற்கான காரணியங்கள்
  - ➢ கட்டுரை எழுதும் முறை பற்றிய தெளிவில்லை / குறைவு.
  - ➢ வழிகாட்டலில் பஞ்சம்.
  - ➢ ஆரம்ப வகுப்புகளில் சொல்லியங்கள், கதை எழுதுவதில் (போதிய கவனமெடுக்கப்படாமை) குறைபாடு
  - ➢ புலம்பெயர் சூழலில் பெற்றோர் 2-ஆவது, 3-ஆவது தலைமுறையினராக இருத்தல்.
* தீர்வுகள்.
  - ➢ தொடக்கத்தில் சில கட்டுரைகளுக்கு கூடுதல் நேரம் கொடுத்து ஆழமான புரிதலைக் கொடுத்தல் வேண்டும்.
* தேடல் செய்ய வைத்தல்.
  - ➢ தலைப்பைக் கூறித் தகவல்களைச் சேகரித்தல் பற்றி உரையாடல்.
* தகவல்களைப் பெறும் வழிகளைக் கூறல்.
  - ➢ இதுவரை படித்த வளர்தமிழ் நூல்கள், வாசித்தல் நூல்கள்.
  - ➢ இணையம் – தகவல்கள், படங்கள்
  - ➢ பெற்றோர் , மூத்தோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மாணவர் சேகரித்தவற்றைக் கேட்டு எழுதுபலகையில் எழுதுதல்.



* விடுபட்டவற்றை ஆசிரியர் வினாக்களைக் கேட்பதனூடாக உள்வாங்கி எழுத வைத்தல்.
* தலைப்பிடல்
* எழுதியவற்றை இலக்கமிட்டு ஒழுங்குபடுத்துதல்.
* தொடக்கம் / முகவுரை
  (தலைப்பை மையப்படுத்தி அதனை விளக்குதல்)
* தொடர்பாடல் பேணப்படல்.
  (மேலும், அத்துடன், இன்னொரு, இவை மட்டுமன்றி....)
* மொழிவளம்.
  (மரபுத்தொடர்கள், உவமை, பழமொழி, குறள், பாடல்....)
* முடிவு / முடிவுரை
  (எழுதியவற்றின் தொகுப்பும் மாணவரின் சொந்தக் கருத்தும்.)
* மாணவர் தான் எழுதியதைத் திரும்ப வாசித்துப் பார்த்து எழுத்துப்பிழை, சொல்லியப் பிழைகளைச் சுயமாகத் திருத்துமாறு கூறல்.
* மாணவர் எழுதியதை ஆசிரியர் திருத்தம் செய்து புள்ளியிடல், குறிப்புகளை எழுதிவிடல்.
* பெற்றோரிடம் கொண்டு செல்லல்.
* தலைப்புத் தொடர்பான சிறுகுறிப்புகளை வழங்குதல்.

எ+கா: **எமது பெற்றோர்**

- பெற்றோர் என்பவர் யார்?
- அவர்களின் சிறப்புகள்.
- எமக்கு அவர்கள் தருபவை (அன்பு, வழிகாட்டல், கல்வி, பாதுகாப்பு)
- அவர்கள் சொல் கேட்டு நடத்தலின் அகத்தியம். / கேட்காவிட்டால்?
- நாம் அவருக்கு செய்யும் கைமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிகாலம்



- பருவகாலங்களில் ஒன்று
- காலநிலை
- சுற்றாடல் எப்படி இருக்கும்?
  வீதி / மரங்கள் / வீடுகள்
- சிறுவர் விளையாட்டுகள்
  பனிப்பாவை / பனியுருண்டை செய்து எறிதல்
- உணவு, உடை
- நத்தார் விழா
- தீமைகள்- வீதி விபத்துகள் / கடுங்குளிர் ......

வளர்தமிழ் 4 - கதை

கதை எழுதுதல்
கற்பிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.
தொடக்கம்:
ஒருநாள் நான் மிதியுந்தில் செல்லும் போது கீழே விழுந்து விட்டேன்.
கற்பனை வளம்:

- கதைக் கருவாகச் சிறுவன் மிதியுந்திலிருந்து விழுந்து காயம் ஏற்பட்டு அழுகிறான்.
- மாணவர் தம்மை அச்சிறுவனாகப் பாவனை செய்து எழுதுவது மிகச் சிறந்த கற்பனை.

கதையொழுங்கு:
படிப்படியான நகர்வு காணப்பட வேண்டும்.
முன்னுக்குப் பின் முரண்பாடு இருத்தல் கூடாது.
செய்தி:
எமது பண்பாடு சார்ந்த குணங்களை வெளிப்படுத்தும் தன்மை.
உதவுதல் / இரங்குதல் / அன்புகாட்டுதல் / விட்டுக்கொடுத்தல் ......
சொல்வளம்:

- மளமள, மெல்லமெல்ல போன்ற மரபுத் தொடர்கள், உவமைகள், பழமொழி, குறள் போன்றவற்றை உரிய இடத்தில் பயன்படுத்துதல்
- மெல்ல மெல்ல காயம் ஆறியது.
- தாய் சொல்லைத் தட்டக்கூடாது! என்பதை நன்கு உணர்ந்து கொண்டேன்.

சொல்லிய ஒழுங்கு:
திணை, பால், எண், இடம், காலம் மாறதிருத்தல்
மிதியுந்து கீழே விழுந்து கிடந்**தார்**..... கிடந்தது.
இறந்த காலத்தில் எழுதுவதற்கு முன்னுரிமை உண்டு.
இடையில் கதைக்கேற்றவாறு காலம் மாறலாம்.

- இனிமேல் எப்போதும் நல்ல பாதையில்தான் **செல்வேன்**.

சொல்லிய உறுப்புகள்:
வேறுபட்ட சொற்களால் எழுவாய் செயப்படுபொருள் பயனிலை, அடைமொழிகளை உணர்த்தும் தன்மை.
இணைப்புச் சொற்கள். (கருத்துத் தொடர்பாடல்).
அது / அங்கே / அப்போது / அத்துடன் / இன்னொரு போன்ற சொற்களைப் பயன்படுத்தி முதல் எழுதிய சொல்லியங்களுடன் இணைப்பை ஏற்படுத்திச் செல்லுதல்.
நிறுத்தக்குறிகளின் பயன்பாடு.
முற்றுப்புள்ளி , வியப்புக்குறி .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியம்

மக்கள் சென்று அடைய வேண்டிய உயர்ந்த இலக்குகளைப் புலப்படுத்துவன இலங்கியங்கள் எனலாம். இலக்கியங்கள், கடந்த கால நிகழ்வுகளைச் சொல்கின்றன. இக்கால நிகழ்வுகளில் ஏற்கத் தகுந்தவை இவை தகாதன இவை என எடுத்துக்காட்டுகின்றன.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டுத் தொகை நூல்களும் முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநெல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் – என்னும் பத்துப்பாட்டு நூல்களும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கழகக் காலத்தில் படைக்கப்பட்ட பழந்தமிழ் நூல்களாம்.

தமிழர் ஒவ்வொருவரும் தமிழ் இலக்கியங்களைக் கற்றுத் தெளிய வேண்டும். தமிழின் பெருமையை உணரவேண்டும். தமிழர் நாம் என்னும் பெருமையுடன் தலை நிமிர்ந்து வாழவேண்டும்.

இலக்கியம்

இலக்கியம் = இலக்கு ⟶ இயம்புதல்

ஏதோ ஒரு இலக்கு நோக்கி இயம்புதலை இலக்கியம் எனலாம். இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி ஆகும்.

இலக்கியம் கற்பிப்பதற்கான சில உத்திகள்

- பாடலைப் பிரிப்பது
- அருஞ்சொற்களைக் கண்டறிதல்
- படைக்கப்பட்ட சூழலை மனதில் வாங்கிப் படிப்பிக்கும்போது இருக்கும் சூழலையும்(வாழிடச் (சூழல்) மனதில் கொண்டு கற்பிக்க வேண்டும.
- மாணவர் நிலையறிந்து படிப்பித்தல் வேண்டும் (கொள்வகை அறிந்து கொடுத்தல் வேண்டும்.)
- எளிமைப்படுத்தி விளங்கப்படுத்தவேண்டும்.
- ஒப்படைகள் மூலம்

இலக்கணம்

இலக்கணம் ஏன்?

இலக்கணம் மொழியினது உயிர். உயிர் இல்லாவிடில் உடல் இயங்காது. இலக்கணம் இல்லாவிடில் மொழி வளம் பெறாது. தமிழ்மொழியைத் திருத்தமாகப் பேச, எழுத இலக்கணம் தெரிந்திருத்தல் வேண்டும். பேச்சு, எழுத்துப் பிழைகளைத் திருத்த முடியும். அதற்கு எளிமையும் விளக்கமும் பொருந்தக் கற்பிக்க வேண்டும்.

இலக்கணம் என்பது பேசுவதற்கும் எழுதுவதற்கும் பொருளைத் தெளிவாக்குவதற்கும் மட்டுமா?
இலக்கியத்தைப் படித்துப் புரிந்து கொள்ள உதவும் இலக்கணம்.

இலக்கணம் மொழியின் வழிகாட்டி. மொழியின் விழி.
மொழியைக் காப்பது இலக்கணம்.
தமிழ்மொழி எனும் தாய், தகுதிகள் என்றும் குன்றா எழிலுடன் நின்றே நிலவிட நன்றாம் இலக்கண நடைமுறை வகுத்தமை.

வளர்தமிழ் 5 வரை உள்ள அடிப்படை இலக்கணத்தை மாணவர்களுக்கு கூடிய பயிற்சிகள் மூலம் எளிமையாகக் கற்பிக்க வேண்டும்.

வளர்தமிழ் 6 தொடக்கம் வளர்தமிழ் 12 வரை இலக்கணம் கற்பிக்கப்படுகிறது. அவற்றை பல எடுத்துக்காட்டுகளுடன் எளிய முறையில் கற்பிக்க வேண்டும்.

முற்றுவினை(வினைமுற்று) – எச்சவினை

வினைமுற்று

1. எழுவாயின் செயல் முற்றுப் பெற்று நிற்கும் இடம்.
2. தொழில், காலம் காட்டும்.
3. திணை, பால், எண், இடம் காட்டும். விகுதியோடு முற்றுப் பெற்று நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவினை அல்லது எச்சவினை

1. எழுவாயின் செயல் முற்றுப் பெறாது நிற்கும் வினைச்சொல்.
2. வேறோர் சொல்லுடன் இணைந்தே முற்றுப் பெற்ற பொருள் உணர்த்தும்.
3. தனித்து நின்று பொருள் தராது.
4. பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல்லுடன் இணைந்தே பொருள் தரும்.
5. காலமும் செயலும் காட்டும்.
6. திணை, பால், எண், இடம் காட்டாது.
7. இது பெயரெச்சம், வினையெச்சம் என இரு வகைப்படும்.

எ-கா – பெயரெச்சம்

படித்த - இறந்தகாலம்
படிக்கின்ற – நிகழ்காலம்
படிக்கும் - எதிர்காலம்

எ-கா – வினையெச்சம்

படித்து முடித்தான் - இறந்த காலம்
படித்து முடிக்கிறான் - நிகழ்காலம்
படித்து முடிப்பான் - எதிர்காலம்

எதிர்மறைப் பெயரெச்சம்

1. எதிர்மறை என்பது செயல் நிகழாது இருத்தலைக் குறிக்கும்.
2. முக்காலத்துக்கும் பொதுவானது.
3. ' ஆ' என்ற எதிர்மறை இடைநிலை தோன்றும்.
4. ' ஆத', ' ஆது' ' ஆமல்' என வந்து எதிர்மறைப் பொருளை உணர்த்தும்.

எ-கா – எதிர்மறைப் பெயரெச்சம்

செய்யாத வேலை
நேற்றுச் செய்யாத வேலை.
இப்பொழுது செய்யாத வேலை.
நாளை செய்யாத வேலை.

<u>எ-கா</u> – எதிர்மறை வினையெச்சம்

செய்யாது - செய் + ஆது

நேற்றுச் செய்யாது இருந்தான்.
இப்பொழுது செய்யாது இருக்கிறான்.
நாளை செய்யாது இருப்பான்.

இலக்கணத்தை எப்படிக் கற்பிக்கலாம்?

- கலந்துரையாடல் மூலம்
- காட்சிப்படுத்தல் மூலம்
- வினாக்களைத் தொடுப்பதன் மூலம்
- தனியாகவும் குழுவாகவும்
- விளையாட்டு முறை - சொல்லட்டைகள்
- பயிற்சிகளைச் செய்வதன் மூலம்
- தொடர்ச்சியான பயிற்சி மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு

வரலாறு என்றால் நடைபெற்று முடிந்த நிகழ்வுகளை ஆதாரங்களுடன் எழுதுவது அல்லது நோக்குவது ஆகும். வரன்முறையாக ஆற்றுப்படுத்துவது வரலாறு எனலாம். ஒரு இனத்தின் பதிவுகள் எங்கு பதியப்படுகிறதோ அதுதான் வரலாறு. இந்த இனங்களின் பதிவுகள் சமகாலத்தில் அவர்களால் பயன்படுத்தப்பட்ட பொருட்களாலும் எழுத்துக்களாலும் அவர்களின் வாழ்வியல் எச்சங்களாலும் அறியப்படுகிறது. இவ்வாறு இந்த மக்களது வரலாறு தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் மூலம் பெறப்படலாம். கட்டிட இடிபாடுகள் பயன்படுத்திய ஆயுதங்கள் புழக்கத்தில் இருந்த காசுகள் கல்வெட்டுக்கள் மட்பாண்டங்கள் ஈமத்தாழிகள், கல்லறைகள் என்பன தொல்லியல் அகழ்வுகளால் பெறப்படுகின்றன. அவ்வாறே இலக்கியங்களும் வரலாற்று ஆதாரங்களுள் முக்கியமாக நோக்கப்படுபவையே. வரலாற்றுக்காலக்கணிப்புக்கு றேடியோ காபன் ஆய்வு 14 பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய சான்றுகளைக் கொண்டு வரலாறு எழுதப்படுகிறது.

பாடநூல்களினூடாக வரலாறு

- கி.மு 500ல் விசயன் வரலாறு தொடங்குகிறது.
- விசயன் வருகையின்போது **வடக்கே நாகர் – தெற்கே இயக்கர்**
- இதற்கு ஆதாரமாக **மகோதரன் குலோதரன்** என்ற இரு நாகமன்னர்களிடையே ஏற்பட்டிருந்த பிணக்கை தீர்க்க 2 வது தடவை புத்தர் வந்ததாக மணிமேகலை என்னும் காப்பியத்தில் இந்நிகழ்வு குறிப்பிடப்படுகிறது
- மகாவம்சத்திற்கு முற்பட்ட காலத்திற்கு **கிமு 2ம்** நூற்றாண்டில் எழுதப்பட்ட **மணிமேகலை**
- நாகர்கள் இருப்பை உறுதி செய்வது இங்கு கவனிக்கத்தக்கது.
- மகாவம்சம் ---மகா நாம தேரரால் எழுதப்பட்ட**து (கி.பி 500) 1100** ஆண்டு வாய்வழி வந்த கட்டுக்கதை
- எந்த இடத்திலும் தமிழர் என குறிப்பிடவில்லை மாய மாந்தர் என குறிப்பிடப்படுகிறது.
- மகாவம்சம் ஊடாக **கிமு 237ல்** சேனன் குத்திகன் தமிழ் மன்னர்கள் சூரதீசன் என்ற மன்னனை வென்று **22** ஆண்டுகள் ஆட்சி. சூரதீசன் தம்பி அசேலனை வென்று எல்லாளன் **44** ஆண்டு ஆட்சி **பாரிந்தன் தாடிகன் ...** இவ்விதம் **88 ஆண்டுகளில் 193** தமிழ் மன்னர்கள் அநுராதபுரத்தை தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததாக கூறப்படுகிறது.
- சேர சோழ பாண்டியர்கள் தமக்குள் முட்டி மோதிக்கொண்டு தென்கிழக்காசியாவின் பெரும்பகுதிகளை பிடிக்கும்போது சோழனது மாநிலமாகவே இலங்கை மாறியது **மும்முடிச்சோழ மண்டலமென** அழைக்கப்பட்டு பொலநறுவையை தலைநகராகக்கொண்டு 82 ஆண்டுகள் ஆட்சி
- இறுதியாக சிங்கள மன்னன் விசயபாகுவின் மகன் வழி பேரன் தர்மபாலா ஆட்சியில் **கி.பி 16ம் நூற்றாண்டில்** போர்த்துக்கேயர் வருகை
- அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணம் தனியரசாக இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது
- **1505** போர்த்துக்கேயர் வருகை தொடர்ந்து ஒல்லாந்தர் ஆங்கிலேயர் வருகை
- **1833** இலங்கை முழுவதையும் ஆங்கிலேயர் ஒன்றாக்கினர்.
- ஆங்கிலேயர் மட்டும் **115** ஆண்டுகள் ஆட்சி ஒட்டு மொத்த ஐரோப்பியர் ஏறக்குறைய 500 வருடங்கள் ஆட்சி
- ஆங்கிலேயர் வெளியேற்றம் **1948 டி.எஸ். சேனநாயக்கா** ஜீ.ஜீ. பொன்னம்பலம் சேர் பொன் இராமநாதன்
- **1956** சிங்களம் மட்டும் சட்டம்
- **1957** செல்வா - பண்டா
- **1965** டட்லி - செல்வா உடன்படிக்கை தொடர்கதை
- **1972** தரப்படுத்தல்
- **2009** முள்ளிவாய்க்கால்

இலங்கையின் வரலாற்றுக்காலத்தை தொடக்கிவைத்த எழுத்தறிவு கொண்ட முதல் ஆதிக்குடிகள் தமிழர்களே என்பதற்கான ஆதாரங்கள்:

1. மணிமேகலை காப்பியம்
2. கிரேக்கரான தொலமியின் தேசப்படத்தில் நாகர் குடியிருப்புக்கள் குறிக்கப்பட்டுள்ளன.
3. நாகர்கோவில் நயினாதீவு நாகசதுக்கம் வல்லிபுரப்பகுதி கந்தரோடை மாந்தை போன்ற குடியிருப்புக்கள்
4. கிபி 500ம் நூற்றாண்டைச் சேர்ந்த பபியான என்ற நாடுகாண் பயணி இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றி தனது நூலில் குறிப்பிடும் போது நாகர்கள் இலங்கையில் வாழ்ந்தார்கள் என்றும் அவர்கள் பல்வேறு நாடுகளில் வர்த்தகத் தொடர்பை வைத்திருந்தார்கள் என்றும் கூறியுள்ளார்.
5. சிங்கள ஆய்வாளர் சிரான் தெரணியகல என்பவர் நாகரே இலங்கையின் வரலாற்றுக்காலத்தை தொடக்கி வைத்த எழுத்தறிவு கொண்ட முதல் மக்கள் என்கிறார்.

இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்களே என்பதை ஆய்வு மூலம் நிறுவிய முக்கிய ஆய்வாளர்கள்:

- **1970** - அமெரிக்க பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம் விமலா பெக்சி - கந்தரோடை, பொம்பரிப்பு
- **1980 – 1981** யாழ் பல்கலைக்கழகம் பேராசிரியர் இந்திரபாலா - ஆனைக்கோட்டை
- **1981** - யுனெஸ்கோ நிறுவனம் - பொலனறுவை, சிகிரியா
- **1980 - 1984** அமெரிக்க சிக்காக்கோ பல்கலைக்கழகம் பேராசிரியர் ஜோன் கார்ஸ்வெல் - மாதோட்டம்
- **1981 - 1982** பேராசிரியர் ரகுபதி - காரைநகர்
- **2004** - கலாநிதி புஸ்பரட்ணம் – பூநகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதற்கு கண்டெடுக்கப்பட்ட ஆதாரங்கள்:

- **ஈமத்தாழிகள்** பொன்பரிப்பில் 8000 உடலங்கள், தாழிகள் 12000 கந்தரோடை, ஆனைக்கோட்டை, மாந்தை, புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, வவுனியா, கேரளம், கர்நாடகம், ஆந்திரா போன்ற இடங்கள்
- **கந்தரோடை** பிராமி எழுத்துக்கள் பதித்த மட்பாண்டம் (கிமு 500 முற்பட்ட 'ற ழ ன' பொறிக்கப்பட்டருந்தன வேல் வடிவங்கள்) செம்பிலானான முச்சூலம், தங்க ரோம கிரேக்க நாணயங்கள், செம்பிலான நாக மோதிரம், உரோமானிய ஆபரணங்கள் (கி.மு 5ம் நூற்றாண்டிக்குரியவை)
- **ஆனைக்கோட்டை** கோவேத என பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட முத்திரை, சவ அடக்கம்
- **சேருவல** என்ற இடத்தில் பிராமிக் கல்வெட்டுக்கள்
- **அம்பாறை** மாவட்டத்தில் குடவில் என்ற இடத்தில் பிராமிக் கல்வெட்டுக்களில் தமிழ் ,பெண் பற்றிய குறிப்புக்கள்



தமிழீழம்



வரலாற்றைக் கற்பிப்பதற்கான உத்திகள்

- ஒப்படை மூலம்
- காட்சிப்படுத்தல் மூலம்
- கலந்துரையாடல் மூலம்
- தகவல் துணுக்குகள் மூலம்
- கதை வடிவில் கூறுவதன் மூலம்
- நாடகங்கள் வாயிலாக .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேர்வு 2017 வினா- விடைத்தாள்களின் பார்வைகள்

வளர்தமிழ் 1

1. மாணவர்கள் மகிழ்ச்சியாகத் தேர்வைத் தொடங்க வைப்பதற்கான பகுதி.
- விளையாட்டு அடிப்படையில் அம்புக்குறியைப் பின்பற்றிச் சரியான பாதையில் சென்று சொல்லுருவாக்கம் திறனை அளவிடல் .
- அம்புக்குறியைப் பின்பற்றி வழித்தடத்தைச் சரியாகக் கீறுதல்.
- கீழே உள்ள சொல்லை எழுத்துப் பிழையின்றி நிறைவு செய்தல்.
- சில மாணவர் வழித்தடத்தைக் கீறுதல் இ சொல்லை நிறைவு செய்தல் என்ற இரண்டில் ஒன்றைச் செய்யாமல் விடுதல் காணப்படுகிறது.

2. உறுப்பமைய எழுதுதல் .

எழுத்துப் பொறிமுறைக்கு ஏற்ப எழுதும் திறனை மதிப்பிடும் பகுதி.
எழுத்துப் பிழையின்றி எழுதுதல் . நிறுத்தக் குறியின் பயன்பாடு.
இடைவெளிகள் . எழுத்துக்களின் அளவு. குற்று , விசிறி , அரவு இவ்வாறான பிழைகள் இல்லாமல் எழுதுதல்.
சொல்லியத்தை முழுமையாக எழுதுதல்.



3. பொருத்தமாக இணைத்தல்.

சொல் / சொற்றொடர்களை இணைத்துக் கருத்துள்ள சொல்லியங்களை உருவாக்கும் திறனை மதிப்பிடும் பகுதி.
- ஒன்றுக்கு மேற்பட்ட இணைப்புக்களைத் தொடுக்கக் கூடாது.
- அடிமட்டம் பாவித்து இணைக்க வேண்டும்.
- வாசித்துச் சரிபார்த்த பின் இணைக்க வேண்டும்.

படங்களைக் கொண்டு நான்கு விதமான செயற்பாடுகளின் திறன்கள் மதிப்பிடப்படுகின்றன.
1. தரப்பட்டுள்ள சொற்களில் படத்துக்குரிய சொல்லை எழுதுதல்.
2. படத்துக்குரிய சொற்களில் விடுபட்ட ஓர் எழுத்தைத் தாமாக எழுதுதல்.
3. படத்துக்குரிய சொல்லைத் தாமாக நினைவுக்குக் கொண்டுவந்து எழுதுதல்.
4. படத்துக்குரிய சொல்லுடன் அதே தொகுதியில் உள்ள சொற்களையும் சேர்த்து உள்ள விடையில் படத்துக்குரிய சொல்லைச் சரியாக இனம் கண்டு வட்டமிடல்.

எழுத்துருவாக்கம் / சொல்லுருவாக்கம்.
- உயிரும் மெய்யும் சேரும்போது ஏற்படுகின்ற குறில் , நெடில் மாற்றங்களை இனம் காணும் திறன்.
- எழுத்துருவாக்கத்தின் மூலம் எழுதிய எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு சொல்லை உருவாக்கும் திறன் என்பவற்றை மதிப்பிடல்.
- விடுபட்ட எழுத்துடன் உள்ள சொல்லை அறிவதற்கு அச்சொல்லுக்குரிய படம் மிகவும் உறுதுணையாக உள்ளது.
- மாணவர் தான் எழுத்துருவாக்கத்தின் மூலம் கண்டறிந்த எழுத்தை சொல்லுருவாக்கத்தில் எழுத வேண்டும்.
- ஒன்றை மட்டும் எழுதி மற்றயதை எழுதாமல் விடக்கூடாது.



நிறங்கள் , பழங்கள் என்பவற்றின் பெயர்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுதல்.
- சரியாக இனம் கண்டு எழுத வேண்டும்.
- முழுவதையும் கண்டறிந்து எல்லாக்கோட்டிலும் சரியாக எழுத வேண்டும்.
- ஒரு சொல்லை இரண்டு தொகுதியிலும் எழுதக்கூடாது.
- நிறங்களுக்குரிய பெயர்களை நிறங்களிலும் , பழங்களுக்குரிய பெயர்களைப் பழங்களிலும் எழுத வேண்டும்.

படத்தைப் பார்த்துச் சொற்கள் எழுதுதல்.

படத்தில் உள்ளவற்றின் பெயர்களைத் தாமாக எழுதும் திறனை அளவிடும் பகுதி.
- சொற்களுக்குரிய குற்றுக்கள் தெரியக்கூடிய வகையில் எழுத வேண்டும்.
- மயக்கொலிப் பிழைகள் இன்றி எழுத வேண்டும்.
- ஆறு சொற்களும் எழுத வேண்டும்.
- சொல்லியமாக எழுதக்கூடாது.

வளர்தமிழ் 1 மேம்படுத்த வேண்டியவை

- சொல்லுக்குரிய எழுத்துக்களை இனம் கண்டு இணைக்கும்போது இணைப்பில் தெளிவின்மை காணப்பட்டது.
- சொல்லைப்பார்த்துக் கோட்டில் எழுதும்போது அதிகமான பிழைகள் காணப்பட்டன.
- குற்று , விசிறி , அரவு இவ்வாறான பிழைகளும் அதிகமாகக் காணப்பட்டன.
- உறுப்பமைய எழுதும்போது பெரும்பான்மையான மாணவர்கள் எழுத்துப் பொறிமுறைக்கு அமைய எழுதத் தவறுகின்றனர்.
- சிலவேளைகளில் சொல்லியம் முழுமை அடையாமலும் உள்ளது.
- சொற்களையோ , சொற்றொடர்களையோ இணைக்கும்போது ஒன்றுக்கு மேற்பட்ட இணைப்புக்களைத் தொடுக்கின்றனர்.
- படத்தைப் பார்த்து அதன் பெயரைக் கீழே உள்ள கோட்டில் எழுதும் பகுதியில் மாணவர்கள் எழுத்துப்பிழை நிறைய விடுகின்றனர்.
- படத்தைப் பார்த்துக் கீறிட்ட இடத்தில் எழுத்தை எழுதும் பகுதியிலும் சரியாக இனம் காணாமல் பிழை விடுகின்றனர்.
- அதே போன்று எழுத்துருவாக்கம் பகுதியிலும் எழுத்தைத் தவறாக எழுதுகின்றனர்.
- ஆறு சொற்கள் எழுதுகின்ற பகுதியிலும் குறைவான சொற்கள் எழுதி உள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்தமிழ் 2

1. பல்தேர்வு வினா (பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக)

பாட நூலில் கற்ற பல்வேறுபட்ட தகவல்களை நினைவுக்குக் கொண்டு வரும் திறனை மதிப்பிடுகின்ற பகுதி.
சரியான விடையைக் கோட்டில் எழுத்துப் பிழையின்றி எழுத வேண்டும்.
சரியான விடைக்குக் கோடு மட்டும் போட்டுக் கோட்டில் எழுதாமல் விடக்கூடாது.
எழுத்துப் பிழையுடன் எழுதக்கூடாது.
தரப்பட்டுள்ள சொல்லுடன் வேறு சொல்லையும் சேர்த்து எழுதக்கூடாது.
ஓர் எழுத்தை விட்டும் எழுதக்கூடாது.

2. சொற்களை ஒழுங்கு படுத்திப் பொருத்தமாக எழுதுதல்.

- பொருளுள்ள சொல்லியங்களை உருவாக்கும் திறனை மதிப்பிடும் பகுதி.
- சொல்லியத்தில் எழுவாயை முன்னுக்கு இடம்பெறுமாறு எழுத வைத்தல்.
- எழுதும்போது எழுத்துப் பிழை விட்டு எழுதக்கூடாது.
- க், ச், த், ப் ஆகிய வல்லெழுத்துக்கள் மிகுந்து நிற்கும் சொல்லை அடுத்து அதே வல்லெழுத்தைக் கொண்டு தொடங்கும் சொல் இடம்பெறும் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- எ+கா: பரிசு / ஆசிரியர் / கொடுத்தார் / மாணவருக்குப்
  ஆசிரியர் மாணவருக்குப் பரிசு கொடுத்தார்.

3. கீறிட்ட இடங்களில் விடுபட்ட சரியான எழுத்தை எழுதுதல்.

- நகர, னகர, ணகர வேறுபாடு.
- ரகர, றகர வேறுபாடு.
- லகர, ளகர, ழகர வேறுபாடு.
- மயக்கொலி வேறுபாடுகளை இனங்கண்டு சொற்களைச் சரியாக உருவாக்கும் திறனை மதிப்பிடல்.

4. கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதும் பகுதி.

- தொகுதி மாறாமல் எழுத வேண்டும்.
- எழுதும்போது எழுத்துப் பிழையின்றி எழுத வேண்டும்.
- முன், பின் உள்ள எழுத்தைச் சேர்த்து எழுதக்கூடாது.
- கண்டறிந்த சொல்லைக் கோட்டில் எழுதாமல் விடக்கூடாது.

5. படத்திற்குப் பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதுதல்.

- படத்துக்குரிய செயலை அறியும் திறனுடன் சொல்லியத்தை முடிக்கும் சொல்லின் திறனையும் மாணவர் பெற்றுள்ளனரா என்பதை அளவிடும் பகுதி.
- முடிக்கும் சொற்களை நிகழ்காலத்தில் எழுத வேண்டும்.
- திணை, பால், எண், இடம் என்பவை மாறாதிருக்க வேண்டும்.
- பேச்சுத் தமிழில் எழுதக்கூடாது.

6. சொல்லியம் எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை :-

- முதலில் காட்சியை இனம் கண்டு எழுத வேண்டும்.
- இப்பொழுது நடப்பதாக நிகழ்காலத்தில் எழுத வேண்டும்.
- ஒவ்வொரு சொல்லியத்திலும் ஓர் அடைமொழி இடம்பெறுமாறு எழுத வேண்டும்.
- கற்பனை வளம். அதாவது காட்சியை விளக்கிப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி எழுத வேண்டும்.
- எழுத்துப்பிழைகள், சொல்லியப்பிழைகள் இன்றி எழுத வேண்டும்.

வளர்தமிழ் 3

1. கீறிட்ட இடத்தில் மிகப் பொருத்தமான சொல்லை எடுத்து எழுதும் பகுதி.

- (வளர் தமிழ் 3, 4 வகுப்புகளில் இடம்பெறுகின்றன)
- மரபுத்தொடர்கள் :-
- முழுச்சொல்லையும் எழுத வேண்டும்.
- பார்த்து எழுதும்போது எழுத்துப்பிழை விடக்கூடாது.
- சரியாக இனம் கண்டு எழுத வேண்டும்.
- க், ச், த், ப் ஆகிய வல்லெழுத்துக்கள் மிகுந்து இருப்பதைக் கவனித்து எழுத வேண்டும்.

2. பந்தியைக் கருத்தறிந்து வாசித்து வினாக்களுக்கு முழுவிடை எழுதும் பகுதி:-

- வளர்தமிழ் 3 இலிருந்து இடம்பெறுகின்ற பகுதி.
- ஒரு சொல்லில் விடை எழுதக்கூடாது.
- விடையுடன் பந்தியில் உள்ள முன் / பின் உள்ள சொற்கள் அல்லது சொல்லியங்களையும் இணைத்து எழுதக்கூடாது.
- குறிப்பாக முதன்மை விடையில் எழுத்துப்பிழை இருத்தல் கூடாது.

வளர்தமிழ் 4

பாடநூல் வினா:-

- பாடங்களில் கற்ற தரவுகளை நினைவுக்குக் கொண்டு வந்து ஏற்றவாறு எழுதும் திறனை மதிப்பிடும் பகுதி.
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.
- முழு விடை தேவை இல்லை.
- வினாவுக்குரிய விடை இடம்பெறுமாறு எழுத வேண்டும்.
- இரண்டு விடை கேட்டிருந்தால் இரண்டையும் எழுத வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிமாற்றம் (வாழிட மொழியில் எழுதுதல்)

- வளர்தமிழ் 4 இலிருந்து ஆரம்பமாகும் பகுதி.
- தமிழில் உள்ள சொற்களுக்கு ஆங்கிலச்சொல் என்ன என்ற மொழிமாற்றும் ஆரம்ப அறிவை மதிப்பிடும் பகுதி.
- பின்பு வளர்தமிழ் 5 இலிருந்து மேல் வகுப்புகளுக்கு ஆங்கிலத்தில் சிறு பந்தியைக்கொடுத்து தமிழில் மொழிமாற்றம் செய்ய வேண்டும்.

கதை எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:-

- தொடக்கம், கற்பனைவளம், கதையொழுங்கு, செய்தி, சொல்வளம், சொல்லிய ஒழுங்கு, இணைப்புச் சொற்கள் பயன்படுத்துதல், நிறுத்தக்குறிகளின் பயன்பாடு.

வளர்தமிழ் 2 முதல் வளர்தமிழ் 4 - மேம்படுத்த வேண்டியவை

- சொற்களையோ , சொற்றொடர்களையோ இணைக்கும்போது ஒன்றுக்கு மேற்பட்ட இணைப்புக்களைத் தொடுக்கின்றனர்.
- ஒலிவட்டுக்குரிய வினாக்களுக்கு பெரும்பாலான மாணவர்கள் விடையளிக்கவில்லை.
- பந்தி வினாவிற்குப் பாடநூலில் உள்ள பந்திகள் கொடுக்கப்பட்டும் அதை நன்றாகக் கருத்து ஊன்றி வாசித்துச் சரியான விடையை எழுதத் தவறுகின்றனர்.
- அதிலும் மேலுள்ள சொற்களைப் பார்த்துப் பொருத்தமாக எழுதும்போது எழுத்துப்பிழை விடுகின்றனர்.
- பந்தி வினாக்களுக்கு விடையளிக்கும்போது அதனுடன் தொடர்பில்லாத விடைகளையும் சேர்த்து எழுதுகின்றனர்.
- தேவையற்ற சொற்கள் வரும்போது சரியான விடையாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- படத்தைப் பார்த்துச் சொல்லியங்கள் எழுதும் பகுதிக்கு மாணவர்கள் சொற்களை எழுதுகின்றார்கள்.
- படத்தைச் சரியாக இனம் காணாமல் இது ஒரு அழகான படம் என்று எழுதுகின்றார்கள். இது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- திணை , பால் , எண் , இடம் , காலம் என்பவற்றைப் பிழையாக எழுதுகின்றனர்.
- நிகழ்காலத்தில் எழுத வேண்டும்.
- எ+கா:- ஒரு பூனை மரத்தில் இருக்கின்றது.
- கதை எழுதும்போது கதை எழுதாமல் சொல்லியங்களையே எழுதுகின்றனர்.
- சரியான தொடக்கம் இன்மை.
- காலத்தை மாறி மாறிக் கலந்து எழுதியுள்ளமை.
- கற்பனை வளம் இருந்தும் மாணவர்கள் எழுத்தாற்றல் இன்மையால் கதை எழுதுவதற்கு இடர்ப்படுகின்றனர்.
-

வளர்தமிழ் 5 முதல் வளர்தமிழ் 12 - மேம்படுத்த வேண்டியவை

கருத்தறிதல்

- பந்தியில் கூறப்பட்ட கருத்தை உள்வாங்கி வினாக்களுக்கு ஏற்ப விடையளிக்கும் திறனை அளவிடும் பகுதி.
- மாணவர் இலக்கை அடைய முடியாமைக்கான கரணியங்கள்,
- முழுவிடை எழுதப்படாமை,
- விடையுடன் முன்/பின் உள்ள விடைக்குத் தொடர்பில்லாத பகுதியையும் சேர்த்து எழுதியுள்ளமை,
- பந்தியில் உள்ளதைத் துண்டாக எடுத்து எழுதியுள்ளமை,
- 'இரண்டு எழுதுக' என்ற வினாவுக்கு ஒன்றை மட்டும் எழுதுதல்,
- எழுத்துப் பிழைகளுடன் எழுதுதல்.

பாடநூல் வினா

பாட நூலில் கற்றவற்றை உள்வாங்கி வினாவுக்கு ஏற்றவாறு விடை எழுதுவதை மதிப்பிடுகின்ற பகுதி. இப்பகுதியில் குறிப்பிட வேண்டிய சில விடயங்கள்.

1. கொடுக்கபபட்டுள்ள அறிவுறுத்தலைக் கவனித்து விடையளிக்கவில்லை.
   'ஏழினுள் ஐந்திற்கு மட்டும்' என்று குறிப்பிட்டுள்ளதை கவனியாது ஏழிற்கும் விடை எழுதியுள்ளனர்.
2. கேட்கப்பட்ட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கப்படாமை.
3. திருக்குறள் தொடர்பான வினாவுக்கு விடையளிக்கப்படாமை.
4. சரியான விடையை எழுதாதுவிடல்.
5. இரண்டின் பெயர்களைத் தருக என்ற வினாவுக்கு ஒன்றை மட்டும் எழுதியுள்ளனர்.
6. 'யாரால், எத்தனையாம் ஆண்டு' என இரண்டு பகுதிகளை உடைய வினாக்களுக்கு ஒரு பகுதிக்கு மட்டும் எழுதியுள்ளனர்.
7. எழுத்துப் பிழைகளுடன் எழுதியுள்ளமை.
8. பல மாணவர்கள் இந்த வினாப் பகுதியைத் தொட்டும் பார்க்கவில்லை.

இலக்கண – மொழியியல் வினாக்கள்

இப்பகுதியில் பகிரப்பட வேண்டிய விடயங்கள்.

1. சொல்லியங்களின் குறியீடுகளைப் போடாமை.
2. எத்தனை என்ற வினாவுக்கு விடையாக எண்ணிக்கையைப் போடாமல் அவற்றை எழுதியுள்ளனர்.
3. வேறுபாடுகளை உணர்ந்து கொள்ளாமல் எழுதியுள்ளனர்.
   - ➢ பெயரெச்சம் – எதிர்மறைப் பெயரெச்சம்.
   - ➢ வினையெச்சம் - எதிர்மறை வினையெச்சம்.
   - ➢ மரபுச் சொற்றொடர் - மரபுத்தொடர்.
   - ➢ உவமையணி - உவமைத் தொடர்
   - ➢ வழு - வழுவமைதி
4. சொற்பொருள் தொடர்பான வினாவுக்கு விடையளிக்காது விட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை
புள்ளிகளை இழக்கக் கரணியமாக அமைந்தவை.

1. கொடுக்கிற தலைப்பிலிருந்து விலகி எழுதியமை.
2. ஏற்கெனவே தாம் அணியம் செய்த கட்டுரையை எழுதுதல்.
3. தலைப்பை நன்றாக விளங்கிக் கொள்ளாது தமது போக்கில் எழுதியுள்ளமை.

எ+ கா: வளர்தமிழ் 7.

நீர் செல்ல விரும்பும் சுற்றுலா. ஏன்?

→ மாணவர்கள் 'நான் சென்ற சுற்றுலா' என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ளனர்.

4. கட்டுரைக்கான அமைப்பு காணப்படவில்லை.

முகவுரை, தொடருரை, முடிவுரை என்ற கட்டமைப்பு.

5. பந்தி பிரிப்பு இல்லை.
6. சொல் எண்ணிக்கையைக் கவனித்து எழுதியதை இடையில் நிறுத்தியுள்ளமை

- கட்டுரை முழுமை பெறாமை.

* சொல் எண்ணிக்கை 10% கூடலாம். ஆனால் கட்டுரை முழுமை பெற்றிருக்க வேண்டும்.

7. எழுத்துப்பிழை.

➢ சிந்தனை வளம் இருந்தும் எழுத்துப்பிழைகள் விடுவதால் தாம் சொல்ல வந்த விடயத்தைச் சொல்வதில் இடர்படுகிறார்கள்.
➢ ஏனைய பகுதிகளை விட கட்டுரையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
➢ அதனால் கூடுதல் புள்ளிகளைப் பெறும் வாய்ப்பை இழக்கின்றனர்.

மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பின் தேவை

➢ உலகத் தொடர்புகள் கூடிவிட்டது
➢ இன்னொரு மொழி தெரிந்தால் நல்லது
➢ மற்றவர்களுடைய கலாச்சாரங்களை அறிந்துகொள்ளலாம், எங்கள் மொழியும் வளரும்

மொழி மாற்றம் செய்யும் போது

➢ இரண்டு மொழிகளிலும் நல்ல தேர்ச்சி இருத்தல் அவசியம்
➢ சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கலாம்
➢ மரபு பண்பாடு பார்த்து ஏற்ற மாதிரி மொழிபெயர்க்கலாம்
➢ கலைச்சொற்கள் தேடவேண்டும்
➢ உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது
➢ பத்தியை வாசித்துவிட்டு கருத்துப்பட மொழிபெயர்க்கலாம்

வாழிடமொழியில் மாற்றுவது

அனைத்துலகப் பொதுத்தேர்வு 2017 இல் எடுத்துக்காட்டுகள்:

வளர்தமிழ் 4 வந்த சொற்கள் சில

காடு –forest, அஞ்சல் -post, ஓவியம் -drawing, நண்பன் -friend, விளையாட்டு - game

வளர்தமிழ் 9

Education is very important to everyone. In the olden days not everyone had the opportunity to have an education. But nowadays we have the great opportunity to get a good education. So we must make the best use of this opportunity and learn well. By continuing our education we will become knowledgeable people.

கல்வி எல்லோருக்கும் மிக முக்கியம். முன்னைய காலத்தில் ஒவ்வொருவருக்கும் கல்விக்கான வாய்புகள் கிடைக்கவில்லை. ஆனால் இப்பொழுது எங்களுக்கு நல்ல கல்விக்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆகவே நாங்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி நன்றாகப் படிக்க வேண்டும். எங்களுடைய கல்வியைத் தொடர்ந்தால் நாங்கள் நல்ல அறிவுள்ளவர்களாக வருவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CAMBRIDGE
International Examinations

Excellence in education

கேம்பிரிஜ் அனைத்துலகத் தேர்வுகள் (Cambridge International Examinations) கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாகும். இதன்வழி மாணவர்கள் வாழ்க்கையை எதிர்கொள்வதற்கு அவர்களைத் தயார்ப்படுத்துவதுடன் அறிதலுக்கான ஆர்வமும் கற்றலுக்கான தொடர்ச்சியான தாகமும் ஏற்படுத்தப்படுகிறது. இந்த அனைத்துலகச் சான்றிதழ்கள் உலகின் தலைசிறந்த பல்கலைகழகங்களினாலும் வேலை வழங்குபவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுபவைாக இருப்பதால் மாணவர்கள் சிறந்த கல்வியையும் உயர்ந்த தொழில்களையும் பெற பலவிதங்களில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றன. இது ஒரு இலாபநோக்கற்ற அமைப்பு. படிப்பவரின் திறன்களை வெளிக்கொணரும் வகையில் மூலவளங்களை ஏற்படுத்தி உயர்வான கல்வியினை வழங்குவதே கேம்பிரிஜ் தேர்வுகளின் அர்ப்பணிப்பாக உள்ளது.

Cambridge O Level Tamil 3226 2018 and 2019

இரண்டு. ஒன்றரை மணி நேர வினாத்தாள்களைக் கொண்டுள்ளது.

வினாத்தாள் 1 தொகுப்பு (Composition) **1மணி 30 நிமிடங்கள்**
பகுதி A பகுதி B என இரு பிரிவுகளைக் கொண்டது.

பகுதி A 15 புள்ளிகள். கடிதம், அறிக்கை அல்லது பேச்சு, உரையாடல் (Letter, report or speech, dialogue) : தரப்பட்ட மூன்று தலைப்புக்களில் ஏதாயினும் ஒன்றைத் தெரிவு செய்து 120 சொற்கள் அளவில் அமையுமாறு தொகுப்பு (Composition) ஒன்றை எழுத வேண்டும்.

- கடிதத்தால் தொடர்பாடல்
- அறிக்கை அல்லது பேச்சு ஒன்றைத் தொகுத்து எழுதுதல்
- உரையாடல் ஒன்றைத் தொகுத்து எழுதுதல்

என்பவற்றில் ஒன்றினை தமிழ் மொழியினைப் பயன்படுத்தி எழுதும் திறனை வெளிப்படுத்தல் வேண்டும்.

பகுதி B 30 புள்ளிகள் : தரப்பட்ட நான்கு தலைப்புக்களில் ஏதாயினும் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்கள் அளவில் அமையுமாறு கட்டுரை (Essay) ஒன்றை எழுத வேண்டும். மொத்தப் புள்ளிகளில் 45%.

வினாத்தாள் 2 மொழிபெயர்ப்பு, மற்றும் வாசித்து விளங்குதல். (Translation and Reading Comprehension) **1மணி 30 நிமிடங்கள்**

பகுதி A பகுதி B என இரு பிரிவுகளைக் கொண்டது.
பகுதி A - 30 புள்ளிகள். : இரண்டு மொழிபெயர்ப்புக்கள் செய்யப்படல் வேண்டும்.

- தரப்பட்ட தமிழ் மூலத்தைத் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும், (10 புள்ளிகள்).
- தரப்பட்ட ஆங்கில மூலத்தை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், (20புள்ளிகள்) மொழிபெயர்த்து எழுதுதல் வேண்டும்.

பகுதி B - 25 புள்ளிகள் :
திறந்த முறையிலான முடிவைக் கொண்ட வாசித்து விளங்குதலுக்கான (Open-ended comprehension) வினாக்கள் கொண்ட தயார்செய்யப்பட்ட பத்தி ஒன்று தரப்பட்டு விடைகள் அளிக்குமாறு கேட்கப்படும். மொத்தப் புள்ளிகளில் 55%.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CAMBRIDGE
International Examinations
Excellence in education

கேம்பிரிஜ் அனைத்துலகத் தேர்வு உயர்தரம்
(Cambridge International A Level)
தமிழ் 9689 (Tamil 9689)

கூறு 2 வாசித்தலும் எழுதுதலும் (Component 2 Reading and Writing)

1மணி 45 நிமிடங்கள் 70 புள்ளிகள்

- 750 சொற்களுக்கு மேற்படாத இரண்டு பத்திகள் தரப்படும்.
- முதல் பத்தியில் இரண்டு வினாக்கள் (ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள்) கேட்கப்பட்டு சொற்களை கண்டறிதல் மற்றும் இலக்கணத்தைக் கையாளுதல் என்பன பரிசோதிக்கப்படும். தொடர்ந்து வாசித்து விளங்கலைப் பரிசோதிக்கக் கூடியவகையில் வினாக்கள் கேட்கப்பட்டு 15 புள்ளிகள் அவ்விடைகளின் உள்ளடக்கத்திற்கும், 5 புள்ளிகள் மொழித்திறனுக்கும் வழங்கப்படும்.
- இரண்டாவது பத்தியில் தொடர்ச்சியான வாசித்து விளங்கல் வினாக்கள் கேட்கப்பட்டு 15 புள்ளிகள் அவ்விடைகளின் உள்ளடக்கத்திற்கும், 5 புள்ளிகள் மொழித்திறனுக்கும் வழங்கப்படும்.
- கடைசி வினா, இரண்டு பத்திகளில் இருந்தும் தகவல்களைச் சேகரித்து (10 புள்ளிகள வழங்கப்படும்) தங்கள் சொந்தக் கருத்துக்களைச் சேர்த்து (5 புள்ளிகள் வழங்கப்படும்). 140 சொற்கள் அளவில் விடையளிக்கக்கூடிய வகையில் அமையும். 5புள்ளிகள் மொழித்திறனுக்கு வழங்கப்படும்.

கூறு 3: கட்டுரை (Component 3: Essay)

1மணி 30 நமிடங்கள் 40 புள்ளிகள்

- தரப்பட்ட 5 தலைப்புக்களில் ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து 250 சொற்களுக்குக் குறையாமலும் 400 சொற்களுக்கு மேற்படாமலும் விடையளிக்க வேண்டும்.

2018ம் ஆண்டுக்கான தலைப்புக்கள்

01. குடும்பம் (Family) – தலைமுறை இடைவெளி, குடும்ப வளையத்துள்ளான முரண்பாடுகள், இளவயதினரும் மூத்த தலைமுறையினரும், குடும்ப சூழலைப் பொறுத்த இளையோர்களின் சிந்தனைகள்
02. நகரவாழ்க்கையும் கிராம வாழ்க்கையும் (Urban and rural life) - நகரவாழ்க்கை கிராமிய வாழ்க்கை இவற்றுக்கிடையான சாதகபாதக நிலைகள், போக்குவரத்துக்கள், தொடர்புசாதனங்கள், பொருள்களை நுகர்தல், குடியிருப்பு
03. தத்துவமும் நம்பிக்கையும் (Philosophy and belief) – உள்ளூர் மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் அனைத்துலக மட்டத்திலும் தத்துவங்களினதும் நம்பிக்கைகளினதும் வகிர்பாகம், வேறுபட்ட தத்துவங்கள் நம்பிக்கைகள் குறித்த விடயங்களைச் சிந்தித்தல், தத்துவங்களும் மதங்கள் அல்லது குழுக்களின் செயற்பாடுகளும், விழுமியங்களும், அறங்களும்.
04. பயணமும் சுற்றுலாவும் (Travel and tourism) - சுற்றுலா நவீனத் தோற்றப்பாடு, உள்ளூர்மக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் இடையிலான உராய்வுநிலைகள், விடுமுறைகளும் வெளிநாட்டுப் பயணங்களும்
05. பண்பாட்டு வாழ்வு / பாரம்பரியம் (Cultural life/heritage) - கலைகளின் உலகம், கலைகளின் முக்கியமான வடிவங்களும் போக்குகளும், நாட்டினத்தின் வாழ்வில் பண்பாட்டினதும் கலைகளினதும் இடம்.

2019ம் ஆண்டுக்கான தலைப்புக்கள்

01. மனித உறவுகள் (Human Relationships) – குடும்பச் செயற்பாடுகள், குடும்ப உறவின் புதிய கோலங்கள், குடும்பத்தில் மூத்தோர்கள் நிலைப்பாடுகளும் அவர்களைப் பேணுவதற்கான பொறுப்புக்களும்.
02. சட்டமும் ஒழுங்கும் (Law and order) – வன்முறைகளும் குற்றச்செயல்களும், போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள், பொலிசாரின் வகிர்பாகம், சட்ட அமுலாக்கம்.
03. வேலை மற்றும் ஓய்வு (Work and Leisure) – வேலை நேரத்திற்கும் ஓய்வு நேரத்திற்கும் முக்கியத்துவம் அளித்தலால் உளஉடல் நலங்கள் சமுதாய நலன்கள் பேணப்படுதல்.
04. போரும் சமாதானமும் (War and peace) – உலகத்தில் காணப்படும் சமய, இனத்துவ, இலட்சிய முரண்பாடுகள், அமைதியின் முக்கியத்துவம்.
05. மாசுபடுத்தல் (Pollution) – உலகின் வெப்பநிலை அதிகரிப்பு, அமில மழை, வளியை மாசுபடுத்தல், நீரை மாசுபடுத்தல், சத்தங்களால் மாசுபடுத்தல்.

கூறு 4 : விதந்துரைக்கப்பட்ட நூல்கள் (Component 4 : Texts)

2மணி 30 நிமிடங்கள், 75 புள்ளிகள்.

தரப்பட்ட பகுதி 1 பகுதி 2 என்பன ஒவ்வொன்றிலும் இருந்து ஒரு வினாவுக்குக் குறையாது தெரிவு செய்து மொத்தம் 3 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 25 புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தம் 75 புள்ளிகள் வழங்கப்படும். ஒவ்வொரு விடையும் 500 சொற்களுக்கும்' 600 சொற்களுக்கும் இடையில் இருத்தல் வேண்டும். 600 சொற்களுக்கு மேற்பட்டால் உயர்வான புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

கூறு 5 : உரைநடை (Component 5 : Prose)

45 நிமிடங்கள், 40 புள்ளிகள்

ஆங்கிலத்தில் தரப்பட்ட சுருக்கமான பத்தியொன்றைத் தமிழில் மொழிபெயர்த்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்வுக்கு விதந்துரைக்கப்பட்ட நூல்கள் 2018
(Set texts for examination in 2018)

பகுதி 1 (Section1)

1. சங்க இலக்கியம்

நற்றிணை 320 ம் பாடல் பாடியவர் கபிலர்
அகநானூறு 187ம் பாடல் மாமூலனார்
புறநானூறு 117ம் பாடல் கபிலர் வேள்பாரியைப் பாடியது. 192 ம் பாடல் கணியன் பூங்குன்றனார் பாடியது.
சிலப்பதிகாரம் வழக்குரை காதை வரிகள் "வருக மற்றவள் தருக" எனத் தொடங்கும் 45ம் வரி முதல் "இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி" என்னும் 81ம் வரி வரை

2. திருக்குறள்

அதிகாரம் 1 – கடவுள் வாழ்த்து, அதிகாரம் 8 அன்புடைமை, அதிகாரம் 60 ஊக்கமுடைமை, அதிகாரம் 94 - சூது.

3. தேவாரம் - அப்பர் தேவாரம் 1வது தேவாரம். திருவதிகை திரு வீரட்டானப் பதிகம் 1முதல் 10 தேவாரங்கள்

4. இக்காலக் கவிதைகள்

1. கண்ணன் என் தாய் (1முதல் 10 வரை). 2. பாரதிதாசனின் மூன்று கவிதைகள் 'பொதிகை மலை விட்டெழுந்து' எனத் தொடங்கும் தென்றல் என்னும் கவிதை, வானந்தான் பாடிற்றா? எனத் தொடங்கும் வானம்பாடி என்னும் கவிதை, 'கலை என்னும் செந்தமிழ்ச் சொல்' எனத் தொடங்கும் எது கலை என்னும் கவிதை.

5. பால்மரக் காட்டினிலே

பி.வி. அகிலாண்டம் என்னும் இயற்பெயர் கொண்ட அகிலனின் நாவல்.

6. நவீன தமிழ்ச்சிறுகதைகள்

1. செவ்வாழை – அறிஞர் அண்ணா 2. குருத்து - இந்துமதி 3. தாய்ப்பசு – அகிலன்

4. ஞானக்குகை – புதுமைப்பித்தன் 5. மண்ணும் மாடியும் - நா. பார்த்தசாரதி

2019 ம் ஆண்டுக்கான தமிழ்ப்பாடத்திட்டத்தில் மாற்றங்கள் எதுவுமில்லை. 2020ல் மாற்றங்கள் உண்டு.

(கேம்பிரிஜ் தேர்வுகள் குறித்த தகவல் தொகுப்புக்கு உதவியவர்கள் : இங்கிலாந்தில் தமிழ்மொழி தமிழ் இலக்கிய வளர்ச்சி குறித்த முனைவர் பட்ட ஆய்வாளரும், கேம்பிரிஜ் அனைத்துலகத் தமிழ் வினாத்தாள் தயாரிப்பாளராக இருந்து பணிநிறைவு பெற்றவருமான, நீற்றா பற்றிமாகரன் ஆசிரியை அவர்களும், இங்கிலாந்தில் தமிழர் வாழ்வியலும் வரலாறும் குறித்த முனைவர் பட்ட ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன் ஆசிரியர் அவர்களும் ஆவர்)

2017 முதலான பல்கலைகழக அனுமதிக்கான UCAS புள்ளிகள் பின்வருமாறு அமைகின்றன.

A* -56, A-48, B-40, C-32, D7 -24, E16.
Cambridge International AS & A Levels are recognised by UCAS and Universities in the UK and overseas as equivalent, grade for grade, with UK AS and A Levels. Passing grades for Cambridge International A Levels are A* -E, with A being the highest.

(Source: Where will a Cambridge qualification take you? Guide to the recognition and acceptance of Cambridge qualifications. Page 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்திறன் போட்டிகள் 2017 /2018

(பேச்சுப்போட்டி, திருக்குறட்போட்டி, கட்டுரைப்போட்டி & கவிதைப்போட்டி)

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக்கிளையின் வளர்தமிழ்ப் பாடநூலைப் பின்பற்றும் அனைத்துப் தமிழ்ப் பள்ளிகளுக்கிடையிலான தமிழ்த்திறன் போட்டிகள்

நாள்: 03.12.2017 ஞாயிறு

இடம்: Alperton Community College
Upper - School Site
Stanley Avenue
Wembley
Middlesex HA0 4JE

உங்கள் பள்ளிகளில் மேற்படி போட்டிகளை நடாத்தி, இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் தொகுப்புப் படிவ விபரக் கோர்வையையும் கருத்துப்படிவத்தையும் 12.11.2017க்கு முன்பாக tedcuk2014@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் தமிழர் கல்வி மேம்பாட்டுப்பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை வாழ்த்துகளைத் தெரிவிக்கிறது.

அனைத்துலகத் தமிழ்ப் பொதுத்தேர்வு 2017 இல் ஆண்டு 12 சித்தியெய்திய மாணவர் சிறப்பு கௌரவிப்புடன், 1+ அதிதிறனும் ஆண்டு 10,11 சித்தி பெற்ற மாணவர்க்குமான பரிசளிப்புடன் தமிழ்த்திறன் போட்டி 2017/2018 க்கான பரிசளிப்பு

பரிசளிப்பு விழா 2017 / 201

1) 2017 தமிழ் பொதுத்தேர்வில் ஆண்டு 12 சித்தியெய்திய மாணவர் சிறப்புக் கௌரவிப்பு
2) 2017 தமிழ் பொதுத்தேர்வில் அதிதிறன் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு
3) 2017 தமிழ் பொதுத்தேர்வில் ஆண்டு 10,11 இல் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு
4) 2017/2018 தமிழ்த்திறன் போட்டிகளுக்கான பரிசளிப்பு

காலம் - 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை 10.00 மணி - 18.00 மணி வரை

இடம் - **Byron Hall, Harrow Leisure Centre, Christchurch Avenue, Harrow, Middlesex HA3 5BD**

அனுமதி: இலவசம்

தமிழ் இலக்கியமாணி பட்டமளிப்புவிழா 2018

தமிழ் இலக்கியமாணி பட்டப்படிப்பில் இரண்டாம் ஆண்டு நிறைவு செய்தவர்களுக்கான பட்டமளிப்பு

காலம் - 28.04.2018 சனிக்கிழமை இடம் : பிரான்சு நாட்டில் அனைத்துலக பயிற்சியாளர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகளுக்காக: ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர் நாடுகளில் வளர்தமிழ் பாடநூல்கள்

உலகளாவிய வகையில் 14 நாடுகளில் 60000த்தும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஒரே பாடத்திட்டம், ஒரே தேர்வு, ஒரே சான்றிதழ்

மழலையர் நிலையிலிருந்து வளர்தமிழ் 12 வரை, அத்துடன் வளர்தமிழ் 12 தேர்வு எழுதிய மாணவர்கள்,

தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோருக்கான பட்டயக்கல்வி (BTLI) அத்தனையையும் உள்ளடக்கிய

தமிழ் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வளர்தமிழ் பாடநூல்கள்

- மழலையர் நிலை தொடக்கம் வளர்தமிழ் 12 வரையுள்ள வளர்தமிழ்ப் பாடநூல்கள் வாழிட நாட்டுப் பள்ளிகளின் பாடத்திட்டத்திற்கு சமச்சீராக வடிவமைக்கப்பட்டவை.

அன்பார்ந்த தமிழ் உறவுகளே!

- மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் தமிழ் மொழிக் கற்கை நூல்களை வாங்கும்போது தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் வெளியிடப்பட்ட நூல்கள் தானா என்பதைப் பார்த்து வாங்குமாறு தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை அன்புடன் கேட்டுக்கொள்கிறது.
- செம்மொழியாம் எம் தாய்மொழி தமிழ்மொழியை எதிர்காலத்தில் உரிய முறையில் கொண்டு செல்ல வளர்தமிழ் பாடநூல்கள் வழிவகுக்கின்றன.
- எங்கள் வரலாற்றை அறிகின்ற பாடநூல்கள் வளர்தமிழ் பாடநூல்கள்.
- தமிழ்மொழியின் நான்கு திறன்களையும் (கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல்) மேம்படுத்தும் வகையில் ஆக்கப்பட்டுள்ள வளர்தமிழ் பாடத்திட்டம்
- மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தேவையான விளக்கங்கள், பாடத்தின் நோக்கம், அடைவு, ஆசிரியருக்குரிய கற்பித்தற் குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பாடநூல்கள்.
- இப்புதிய பாடநூல்களில் ஆசிரியர்களுக்குத் தங்கள் கற்பித்தலைச் சிறந்த முறையில் செய்வதற்கு ஏற்றவாறு கற்பித்தற் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன.
- ஆசிரியர்களுக்கு வருடாந்த வளர்தமிழ் பாடநூல் கற்பித்தலுக்கான பயிற்சிப் பட்டறையுடன் தேவையான விளக்கங்கள் மிகத் தெளிவாகக் கொடுக்கப்படுகின்றன.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை - ஐக்கிய இராச்சியக் கிளை

Tel: 020 8432 6999 | Mob: 077 7175 3525 | E-Mail: tedcuk2014@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
Tamil Education Development Council

தமிழ் இலக்கியமாணி கற்கைநெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print Tel: 020 8503 6643 www.jrprint.com